விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 22 திங்கட்கிழமை (06.06.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 169

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

சீமெந்து

# பொதுக் கட்டமைப்பில் ஒப்பமிட முன்னர்

# ஜே.வி.பி அமைச்சர்கள் நால்வருக்கு வேட்டு

## ஜனாதிபதியின் முடிவு இதுவெனத் தெரிவிப்பு

(நமது நிருபர்)

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பொதுக் கட்டமைப்பு எதிர்வரும் 15 ஆம் திகதி நோர்வே அனுசரணையாளர்கள் முன்னிலையில் ஜனாதிபதியால் கைச்சாத்திடப்படவுள்ளது. அதற்காக நோர்வே அனுசரணையாளர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவதற்கு முன்பாக ஜே.வி.பியின் முக்கிய நான்கு அமைச்சர்களை அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## நவாலி மானிப்பாய் வீதியில் நேற்று ஒருவர் சுட்டுக்கொலை

### யாழில் 24 மணி நேரத்தினுள் இரண்டாவது சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ். நவாலி மானிப்பாய் வீதியில் மூத்தவிநாயகர் ஆலயத்திற்குப் பின்வீதியில் வைத்து 30 வயது மதிக்கத்தக்க ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பிரஸ்தாப நபரை வழிமறித்த இனந்தெரியாதோர் அவரின் காதிலும், கழுத்திலும் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக சம்பவ இடத்திற்குச் சென்ற மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி (12 ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவப் பாதுகாப்பை வழங்கமறுத்தால்

## நாமே எமது இராணுவப் பாதுகாப்புடன் பயணத்தை மேற்கொள்ளவேண்டிவரும்!

### விடுதலைப் புலிகள் க.கா. குழுவிற்கு கடிதம்

(கிளிநொச்சி)

தமிழர் தாயகப் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அரசியல் பணியில் ஈடுபடும் பேராளிகளுக்கு இராணுவம் போக்குவரத்து ஒழுங்குகளையும், பாதுகாப்பையும் வழங்க மறுத்தால் எமது இராணுவப் பாதுகாப்புடன் பயண ஒழுங்குகளை மேற்கொள்ளவேண்டி நேரிடுமென விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடிதம் மூலம் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆக்கிரமிப்புப் பகுதியில் அரசியல் பணிகளை மேற்கொண்டு வரும் போராளிகள் தலைமைப் பீடத்தின் ஆலோசனைகளுக்காக சென்றுவருவதற்கான போக்குவரத்து ஒழுங்குகளையும், பாதுகாப்பையும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அண்மையில் கோரியிருந்தது.

ஆனால் இதற்கு உரிய பதில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## குருநகரைச் சேர்ந்த இருவர் நேற்று கொட்டாஞ்சேனையில் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் நேற்று அதிகாலை இரண்டு தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் யாழ். குருநகரைச் சேர்ந்த தேவதாசன் இமானுவேல் (வயது 26), பிரான்சிஸ் டெனிசியஸ் (வயது 25) என அவர்களின் அடையாள அட்டைமூலம் அடையாளம் காணப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்புக் கோட்டையிலிருந்து மட்டக்குளி நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்றில் பயணம்செய்துகொண்டிருந்தபோது கொட்டாஞ்சேனை பொன்னம்பலவாணேஸ்வரர் கோவில் முன்பாக இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட பஸ்ஸைப் பின்தொடர்ந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருட்களின் விலை நேற்று மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

எரிபொருள்களின் விலைகள் நேற்று நள்ளிரவில் இருந்து மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இவ்விலை அதிகரிப்பின்படி பெற்றோல் மற்றும் சுப்பர் பெற்றோல் என்பன ஆறு ரூபாவினாலும், டீசல் மற்றும் சுப்பர் டீசல் என்பன நான்கு ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மண்ணெண்ணெய் இரண்டு ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. அரசியல்துறை அலுவலகம் பொலிஸாரால் திடீர் சோதனை

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு நகரப் பிரதேச அரசியல்துறை அலுவலகம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டது.

மட்டக்களப்பு அரசடிச் சந்தியிலுள்ள இந்த அலுவலகத்தில் நள்ளிரவு 12 மணிக்கு துணைப் படையினர் சகிதம் சென்ற இராணுவத்தினர் தேடுதல் நடத்த முற்பட்டனர். அதன்போது அங்கிருந்த விடுதலைப் புலிப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவினர் மீது சூடு முக்கியஸ்தர் ஒருவர் பலி

### மட்டக்களப்பு எல்லைப் புறத்தில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட எல்லைப்புற பிரதேசமான ரிதிதென்னையில் நேற்று முன்தினமிரவு கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இனந்தெரியாத நபர்கள் நடத்திய இத் துப்பாக்கிச் சூட்டில் கருணா குழுவின் முக்கியஸ்தரான களுதாவளையைச் சேர்ந்த மருதமேனன் என்ற சந்திரலிங்கம் சுரேஸ் (வயது 21) என்பவர் கொல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள மறைவிடத்திலிருந்து கருணாகுழுவைச் சேர்ந்த 4 பேர் பிக்அப் வாகனத்தில் பொலநறுவை நோக்கி பயணம் செய்ததாகவும், அதன்போது தேநீர் கடையொன்றில் தேநீர் அருந்துவதற்காக வாகனம் நிறுத்தப்பட்டபோது அங்கு வந்த இரண்டு நபர்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையிலும் புலிகளின் விமானத் தளம்?

### சண்டே ரைம்ஸ் கூறுகிறது

(கொழும்பு)

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் விமான ஓடுபாதையொன்றை அமைத்துவருவதாக கொழும்பிலிருந்து வெளியாகும் சண்டே ரைம்ஸ் வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

தென் திருமலையில் சம்பூரில் தெற்குப் பகுதியில் தகரவாடியில் 25 ஏக்கர் பரப்பளவில் பெரும் எண்ணிக்கையிலான சீமெந்து மூடைகள் அடுக்கப்பட்டுள்ளன. இந்த அமைவிடமானது திருகோணமலை துறைமுகத்தை நோக்கியதாகவுள்ளது.

இச்சூழலானது திருகோணமலையில் விடுதலைப் புலிகள் விமானத்தளம் ஒன்றை அமைக்கும் முயற்சியாக இருக்கக்கூடும். இதுகுறித்து கடந்தமாதம் இலங்கைப் புலனாய்வுத்துறை அரசுக்கு தகவல் அனுப்பியிருக்கிறது.

இந்த விமான ஓடுபாதை கட்டமைக்கப்பட்டு வருவது குறித்து பாதுகாப்பு அதிகாரிகள் இறுதியான முடிவு எதனையும் கூறவில்லை.

ஆள்இல்லாத வேவு விமானங்கள் மட்டுமே இப்பகுதி துப்புர (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR

*your friend in the skies...*



யாழ் – கொழும்பு

விமான பயணத்திற்கு அழையுங்கள்:

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/ 8888

கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290/ 91

Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com

எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...



# இலங்கை–இந்திய பாதுகாப்பு; கைச்சாத்திடும் நிலையில் ஒப்பந்தம்

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு புதுடில்லி சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று அதிகாலை 3.15க்கு இலங்கை திரும்பியுள்ளார். இதேவேளை, இந்திய-இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் நிலை உருவாகி வருவதாக இலங்கை, இந்தியத் தலைவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

புதுடில்லி சென்றிருந்த ஜனாதிபதி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாகாந்தி உட்பட பல்வேறு மட்ட அதிகாரிகளுடன் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார்.

இந்தப் பேச்சுக்களின் போதே இந்திய இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து விரிவாக ஆராயப்பட்டிருக்கின்றது.

இதுகுறித்து ஜனாதிபதியிடம் நிருபர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளித்த அவர் இந்திய இலங்கை பாதுகாபபு ஒப்பந்தம் ஏற்பட வேண்டுமென்று விரும்புவதாகவும் அது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அதன்படி இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் நிலை உருவாகி உள்ளதெனவும் தெரிவித்தார்.


இந்த ஒப்பந்தம் குறித்து இந்தியத் தரப்பு சாதகமாக பரிசீலிப்பதாக தெரியவருகிறது.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவது குறித்து ஆராய்வதில் பிரதமர் மன்மோகன்சிங் ஆர்வம் காட்டியதாகவும் இருநாடுகளும் பாதுகாப்பு ரீதியாக நெருங்கிய ஒத்துழைப்பைப் பேணுவதற்கு இந்த ஒப்பந்தம் சிறந்ததாக விளங்குமென்றும் இந்தச் சந்திப்பில் இந்தியப் பிரதமர்மன்மோகன் சிங் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதியின் சந்திப்பையடுத்து இந்த பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் மக்கள் திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலர் வை.கோ மற்றும் இந்த ஒப்பந்தத்தை எதிர்க்கும் தமிழக கூட்டணிக்கட்சிகளின் தலைவர்களுடன் மத்திய அரசு இதுகுறித்து விரைவில் பேச்சு நடத்துமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை, புதுடில்லியில் வைத்து நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில், பொதுக் கட்டமைப்பு தொடர்பான இந்தியத் தலைவர்களின் ஆலோசனையைக் கருத்தில் கொண்டே அதற்கு இறுதிவடிவம் கொடுக்கப்படுமென்றும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ5)







மண்டைதீவு சிவஸ்ரீ ஸ்கந்த பாலசுப்பிரமணியக் குருக்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைக் கூட்டம் நேற்று முன்தினம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள். (படம்- ஐங்கரன்)

# 38 பொலிஸார் பணிநீக்கம்; 50 பேர் இடமாற்றம்
## தேசிய பொலிஸ் ஆணைக்குழு பரிந்துரை

38 பொலிஸ் அதிகாரிகளைத் தற்காலிக பணிநீக்கம் செய்யுமாறும் 50 பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்குமாறும் தேசியபொலிஸ் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோவுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

தாக்குதல்கள், சித்திரவதைகள், அதிகார துஷ்பிரயோகம் உட்படப் பல முறைகேடுகளுடன் சம்பந்தப்பட்ட38 அதிகாரிகளைத் தற்காலிகமாக பணியிலிருந்து நீக்குமாறும் மேலும் 50 பொலிஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்யுமாறும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபருக்கு சிபாரிசு செய்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகளின் பல்வேறு முறைகேடுகள் சம்பந்தமாக பொலிஸ் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் விசாரணை செய்த பின்னரே ஆணைக்குழு இந்த பரிந்துரையைச் செய்துள்ளதாக ஆணைக்குழுவின் பொதுமக்கள் முறைப்பாட்டுப் பிரிவின் ஆலோசகரான ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் அன்டன் ஜெயநாதன் தெரிவித்துள்ளார்.

பணிநீக்கம் மற்றும் இடமாற்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டவர்களுள் பொலிஸ் கான்ஸ்டபிள்கள், சார்ஜன்ட்கள், பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரிகள் ஆகியோர் அடங்குவதாக ஆணைக்குழு தெரிவித்தது. பொலிஸ் அதிகாரிகள் பற்றி இவ்வருடத்தின் முதல் 3 மாத காலப்பகுதிக்குள் 664முறைப்பாடுகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்றிருப்பதாக ஆணைக்குழு தெரிவித்தது. அதுதவிர பொலிஸில் செய்த முறைப்பாடுகள் குறித்து தகுந்த நடவடிக்கை எடுக்காமை குறித்து 197முறைப்பாடுகளும், பக்கசார்பாக செயற்பட்டமை குறித்து 99 முறைப்பாடுகளும், ஊழல் செய்ததாக 53 முறைப்பாடுகளும், சித்திரவதை செய்தமை தொடர்பாக 14 முறைப்பாடுகளும் இந்த ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ளன. (அ-4)

# பேராசிரியர் நந்தியின் நினைவுக் குறிப்புகள் சில

**பிறப்பு:-** இணுவில் 1928-03-30 பிரபவ வருஷம் பங்குனி 18, பூசம். மிதுன லக்கினம்.

**ஊர்:-** நல்லூர்

**தந்தை:-** வினாசித்தம்பி செல்லத்துரை

**தாய்:-** செல்லம்மா

**மனைவி:-** சாந்தி

**திருமணம்:-** 22.05.1966


**பிள்ளைகள்:-** வள்ளி, தெய்வி, ஜனனி, லட்சுமி

**உடன்பிறந்தார்:-** திருமதி சிவஞானமணி நித்தநாயகம், செ.திருநாவுக்கரசு.

**படிப்பு:-** பளை தமிழ்க்கலவன் பாடசாலை, காங்கேசன்துறை ரோமன் கத்தோலிக்க பாடசாலை, இடைக்காடு தமிழ்ப்பாடசாலை, யாழ்.செயின்ற்ஜோன்ஸ் கல்லூரி, கொழும்பு செயின்ற் ஜோசப்ஸ் கல்லூரி, றோயல் கல்லூரி, இலங்கை பல்கலைக்கழகம், கொழும்பு வைத்தியக்கல்லூரி.

**மேற்படிப்பு:-** லண்டன் பல்கலைக்கழகம் **D P H, PhD.**

**ஆராய்ச்சித்துறைகள்:-** குழந்தைகளின் நிமோனியாக்கள், இலங்கையில் மலேரியா, மலேரியா பற்றிய மக்களின் அறிவு, இலங்கையில் நோயியல் ஆராய்ச்சியும் நாட்டிற்கு நன்மைகளும், பேராதனை பல்கலைக்கழக புதிய மாணவர்களிடையே ராக்கிங், இலங்கையில் 132 தனிமருத்துவர் பற்றிய ஆய்வு, இலங்கையில் 201 ஆயுர்வேத மருத்துவர் பற்றிய ஆய்வு, குழந்தைகள் பிள்ளைகள் மரணப்பதிவு, யாழ்.வட்டாரத்தில் மரணப் பதிவு.



**தமிழ் எழுத்துத்துறையில்:-**

முதலாவது சிறுகதை சஞ்சலமும் சந்தோஷமும் (வீரகேசரி-1947)

புனைபெயர்கள் வி.செ.சி, பெனிசிலின், மகன், ஜெய்ஹிந்த்சாஸ்திரியார், ராஜாஜி அருளிய புனைபெயர் நந்தி, இலங்கை சாகித்திய மண்டலப்பரிசு-மலைக்கொழுந்து நாவலுக்கு.

**தமிழ் நூல்கள்**

அருமைத் தங்கைக்கு- தமிழ்ப்புத்தக ஆலயம் சென்னை. 2ஆம் பதிப்பு யாழ்.கலைவாணி அச்சகம்.

மலைக்கொழுந்து- யாழ்.ஆசீர்வாதம் அச்சகம். 2ஆம் பதிப்பு நர்மதா பதிப்பகம் சென்னை.

ஊர்நம்புமா (12சிறுகதைகள்)-யாழ். ஆசீர்வாதம்.

அன்புள்ள நந்தினி- ஆத்மஜோதி அச்சகம்.

நந்தினி உன்பிள்ளை- ஆத்மஜோதி அச்சகம்.

உங்களைப்பற்றி- யாழ்.சக்தி அச்சகம்.

குரங்குகள்- கண்டி ரோயல் பிறின்டேஸ்.

தங்கச்சியம்மா வீரகேசரி பிரசுரம்

கண்களுக்கு அப்பால்- சென்னை புக்ஹவுஸ்

**வெளிநாட்டுத்தொழில்**

உதவிவைத்தியர்களுக்கான பாடத்திட்டத்திற்கு ஆலோசகர், சுகாதார அமைச்சு ஜோர்தான்.

மருத்துவ சேவை ஆராய்ச்சி பற்றிய உலக சுகாதார ஸ்தாபன ஆலோசகர், சுகாதார அமைச்சு மலேசியா.

# இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கொல்லப்படுவதற்கு மிலேனியம் சிற்றி முகாம் சோதனையிடப்பட்டதே காரணம்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் ஆழ ஊடுருவித் தாககும் படையணி தொடாபான விபரங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் வெளிக் கொண்டுவரப்பட்டன.இதனாலேயே தற்பொழுது இராணுவப புலனாய்வுப் பிரிவினரை இலக்கு வைத்துத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையான 'த ஜலண்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பல முக்கிய தலைவர்கள் மீது வெற்றிகரமான தாக்குதல்களை மேற்கொண்டு வந்த இராணுவத்தினரின் ஆழ ஊடுருவித் தாக்கும் படையணியினர் பலர் கொல்லப்பட்டு விட்டதாகவும் அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடநத 2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இடம்ற்ற தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைக்கு ஐக்கிய தேசயக் கட்சியின் தலைவர் ரணில விக்கிரமசிங்க பயன்படுத்திய பேருந்தைத் தாக்குவதற்கு இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணி திட்டமிட்டிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டை மறுத்திருந்த முன்னாள் இராணுவத் தளபதியும், இராணுவப் புலனாய்வுப் பணியகத்தின் முன்னாள் பணிப்பாளருமான லெப்டினனட் ஜெனரல லயனல் பலகல்ல, ரணில் விக்கிரம சிங்கவின் உயிருக்கு இராணுவப் புலனாய்வுப் பணியகத்தினால் ஆபத்து ஏற்படாதென உறுதியளித்து ஐக்கிய தேசியக் கட்சியின் அப்போதைய தவிசாளர் சாத்த ரத்வத்தவுக்கும், அப்போதைய பொலிஸ்மா அதிபருககும் கடிதமொன்றை அனுப்பி வைததிருந்தாக 'த ஜலண்ட்' தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு டிசம்பா மாதம் இடம்பெற்ற பாராளுமன்றத் தோதலில் வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி, இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் உருவாக்கியிருந்த ஆழ ஊடுருவும் படையணியினர் தங்கியிருந்த அத்துருகிரிய மிலேனியம் சிற்றி முகாமைச் சோதனையிட்டு, அங்கு தங்கியிருந்த ஆழ ஊடுருவும் படையணியைச சேர்ந்த சிலரையும், அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களையும் கைப்பற்றியிருந்தது. இதன் போது, ஆழ ஊடுருவும் படையணி தொடர்பான விபரங்களும், அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பான விபரங்களும் வெளிச்சத்துக்கு வந்தன.

தேர்தல் காலத்தில் இடம்பெற்ற உடததலவின்ன படுகொலையுடன் தொடர்புடையவா என்று சந்தேகிக்கப்பட்ட முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் மகனான சானுக ரத்வத்த, அத்துருகிரிய முகாமில் மறைந்திருப்பதாகச் சந்தேகம் தெரிவித்தே, அந்த முகாம் தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்மூலமே இராணுவத்தினா்ன ஆழ ஊடுருவும் படையணி தொடாபான விபரங்களும் வெளியாகின. இந்த விசேட நடவடிக்கைக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல தலைமை வகித்திருந்தார்.

இவ்வாறு இராணுவப் புலனாய்வுப பிரிவனரின் ஆழ ஊடுருவித் தாக்கும் படையணி தொடாபான விபரங்கள் வெளிச்சத்துக்கு வந்ததாலேயே, அதனுடன் சம்பந்தப்பட்ட பலரையும் விடுதலைப் புலிகள் இலகுவாக இனங்கண்டு கொன்றொழித்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்திருப்பதாக 'த ஜலண்ட்' தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

2003ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில், தமக்கிருக்கும் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி திடீரென பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்றுக் கொண்டதும், அத்துருகிரிய இராணுவ மறைவிட இரகசியத்தை வெளிப்படுத்தியதன் மூலம் தேசியப் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவித்ததாகத் தெரிவித்து, சிரேஷ்ட பொலிஸ் அத்தியடசகர் குலசிறி உடுகம் பொல மீது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைகளின் போது, 52வது நபராகச் சட்சியமளித்திருந்த சுட்டுக்கொல்லப்பட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கட்டளையிடும் தளபதி லெப்டினனட் கேணல் முத்தலிப், ஆழ ஊடுருவித தாக்கும் படையணியில் தான முக்கியமான பங்கு வகித்திருந்ததாகத் தமது சாட்சியத்தில் கூறியிருநத தாகவும், 'த ஜலண்ட்' குறிப்பிடுகிறது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் உருவாக்கப்பட்டிருந்த இந்த ஆழ ஊடுருவும் படையணி விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினரான சங்கர் உட்பட பல முக்கிய உறுப்பினர்கள் மீதான தாக்குதலகளை மேற்கொண்டிருந்ததுடன், விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழிப்பதை இலக்காகக் கொண்டு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-4)

## ரிக்கெற் இன்றி பிரயாணிப்போருக்கு தண்டம்

(கொழும்பு)

தனியார் பஸ்களில் ரிக்கெற் இன்றி பயணம் செய்யும் பிரயாணிகளுக்கு அபராதம் விதிக்கப்படுமென்று மேல் மாகாண வீதி, பிரயாணிகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இத்தகைய குற்றத்தை இழைப்போருக்கு 100ரூபா அபராதமும அவர்களது பிரயாணக் கட்டணத்தின் 2 மடங்கு தொகையும் தண்டமாக விதிக்கப்படும்.

இதேவேளை, பிரயாணிகளுக்கு ரிக்கெற்றை வழங்காத பஸ்வண்டியின் உரிமையாளர்களுக்கு 250 ரூபா அபராதம் விதிக்கப்படும் என்றும அதிகாரசபையின் தலைவர் தெரிவித்தார்.

ரிக்கெற்றுக்களை வழங்கத் தவறினால தங்கள் நாளாந்த வருமானத்தில் 25 சதவீதத்தை இழக்க வேண்டிய நிலையேற்படுமென்று பஸ்உரிமையாளர்களுக்கு அவர் எச்சரித்துள்ளார்.(ற-9)

## இலங்கை - இந்தியாவிற்கு பொதுவான நாணயமா?

### இந்திய அரசு மறுப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பொதுவான நாணய முறையை மேற்கொள்வது தொடர்பாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று இந்திய நிதித்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இந்திய ஊடகமாக 'எக்கனாமிக்ஸ ரைம்ஸ்' இது தொடர்பான விரிவான முகப்புப் பக்கக் கட்டுரையை நேற்று முன்தினம் வெளியிட்டிருந்தது.

டில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகனசிங்குடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடத்திய பேச்சுக்கள் குறித்த செய்திக் கட்டுரையில் இத்தகவல் இடம்பெற்றிருந்தது.

இதுகுறித்து புதுடில்லி ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த நிதித்துறைப் பேச்சாளர் இத்தகைய நகர்வுகள் எதுவும் நிதி அமைச்சின் பரிசீலனையில் தற்போது இல்லை என்றார்.

இத்தகைய செய்திகளால் இந்தியப் பண மதிப்பில் எவ்வித தாக்கமும் ஏற்படாது என்று மும்பைப் பண மதிப்பீட்டுத் துறையினர் தொிவித்தனர்.

ஐரோப்பிய நாடுகளுக்கு யூரோ நாணயம் இருப்பது போல் ஆசியாவிற்கும் ஒரே நாணயமுறை பின்பற்றப்பட வேண்டும் என்று இலங்கைத் தரப்பில் தொடர்ந்து பலமுறை வலியுறுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-4)

## மீள்குடியமர்வை வலியுறுத்தி மிருசுவில் மக்கள் மறியல்போர்

(திருநெல்வேலி)

தென்மராட்சி மிருசுவில் பகுதி மக்கள் தம்மைத் தமது சொந்த வீடுகளில் குடியேற அனுமதிக்குமாறு கோரி எதிர்வரும் 11 ஆம் திகதி ஏ-9 வீதியில் மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இபபகுதி மக்களின் வீடுகளில் நிலைகொண்டுள்ள படையினர் இவர்களின் வீடுகளை விட்டு வெளியேற மறுத்து வருவதுடன் இவர்களின் வீடுகளில் உள்ள பயன் தரும மரங்களையும் தறித்துத் தமது தேவைக்குப் பயன் படுத்தி வருகின்றனர்.

படையினரின் இந்த நடவடிக்கையால் விசனமடைந்துள்ள பாதிக்கப்பட்ட மக்களே படையினருக்கு எதிராக இம் மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். (ற-43)

## அமைப்புகளுக்கு நிதியுதவி தடுக்க புதிய சட்டம்

இலங்கையில் இயங்கும் இயக்கங்களுக்கான நிதி உதவி கிடைப்பதைத் தடைசெய்யும் விசேட சட்டமூலம் ஒன்றைக கொண்டுவர இலங்கை அரசாங்கம் தீர்மானித துள்ளது.

இது தொடர்பான சட்டமூலத்தை வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தயாரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சட்டமூலத்துக்கு அமைய இலங்கையில் செயறபடும் அமைப்புக்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நிதியுதவி அளித்தல் தடைசெய்யப்படும்.

அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக இந்நாட்டிலுள்ள இயக்கங்களுக்கு நிதியுதவி கிடைப்பதைத் தடுக்கவே இத்தகைய விசேட சட்டமூலத்தைக் கொண்டு வர அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-4)

## ஜே.வி.பி வெளியேறுவது உறுதி; 'லங்கா' நாளேடு தகவல்

தமிழ் மக்களுக்கான ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து கையெழுத்திட்டால் ஆளும் கூட்டணி அரசிலிருந்து ஜே.வி.பி கட்சி வெளியேறுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் ஒரேயொரு ஆதரவு நாளிதழான 'லங்கா' கடந்த வெள்ளிக்கிழமை முதல் பக்கச் செய்தியாக இதை வெளியிட்டுள்ளது.

கடநத மே மாதம் 31 ஆம் திகதி நடைபெற்ற ஜே.வி.பியின் மத்திய குழுக்கூட்டத்தில் ஒருமனதாக இம் முடிவு எடுககப்பட்டதாகவும் ஆளும் அரசிலிருந்து மட்டுமன்றி மக்கள் ஐக்கிய விடுதலை முன்னணிக் கூட்டணியிலிருந்து வெளியேறவும் ஜே.வி.பி முடிவு செய்துள்ளதாக 'லங்கா' நாளேடு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களிலும் முக்கியமாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளரை நிறுத்தவும் ஜே.வி.பி தீர்மானித்திருக்கின்றது.

எதிர்வரும் 15 ஆம் திகதி பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடப்படலாம் என்றும் 7 ஆம் திகதி கையெழுத்திடப்படலாம் என்றும் இருவித தகவல்கள் தெரிவிப்பதாக அந் நாளேடு குறிப்பிட்டுள்ளது. (ற-4)

## அரசு ஒருபோதும் கவிழாது ஜே. வி. பி அமைச்சர் உறுதி

(கொழும்பு)

ஆளும் கூட்டணி அரசு ஒருபோதும கவிழாது என்று ஜே.வி.பி சார்பில் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர் லால்காந்த நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கலவெல எனுமிடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் லால்காந்த பேசிய போதே இதனைத் தெரிவித்தார்.

இந்த நாட்டையும் மக்களையும பாதிக்கும் வகையிலான எந்த ஒரு நடவடிக்கையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொள்ள மாட்டார் என்ற நம்பிக்கை ஜே.வி.பிக்கு இருக்கிறது. இந்த அரசு நல்ல முறையில மக்களுக்காக செயல்பட்டு வருகிறது.

எத்தனை யுகங்கள் வெளிப்பட்டாலும் ஜே.வி.பி அரசிலிருந்து ஒருபோதும் வெளியேறாது. இந்த கூட்டணியை உடைப்பதற்காக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க காத்திருக்கிறார். இது மிகப்பெரிய நகைச்சுவை. அது ஒருபோதும் நடக்காது.

நாட்டின் கிராமப்புறங்களில் ஆளுமை மிக்கவர்களை உருவாக்க ஜே.வி.பி நடவடிக்கைகளை மேற்கொணடு வருகிறது. கடந்த ஓராண்டில் ஆளும்கூட்டணி அரசானது அரசு நிறுவனத்தையோ இயற்கை வளங்களையோ விற்கவில்லை. 42 ஆயிரம பட்டதாரிகளுக்கு நிரந்தர வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது என்றும் அவர் கூறினார்.(அ-4)

## கிழக்கில் இடம்பெறும் வன்முறைகள் புனரமைப்புப் பணிகளுக்கு இடையூறு

### உதவி வழங்கும் நிறுவனங்களின் கூட்டமைப்பு கவலை

(கொழும்பு)

இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில் அதிகரித்து வரும் குண்டுத தாக்குதல்கள் மற்றும் பதற்றச் சூழல ஆகியவை ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் என்று உதவி வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பு கூறியுள்ளது.

98அமைப்புகளின் சார்பில் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட அறிககையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

மீளமைப்புப் பணிகளை இவை தாமதப்படுத்தும், மறுசீரமைப்புப் பணிகளுககு இடையூறு விளைவிக்கும் என்றும் இத்தகைய சூழலில் தாங்கள் இயங்குவது ஆபத்தானது எனறும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கிழக்கில் தற்போதைய பதற்ற சூழல் முன்னெப்போதையும் விட அதிகரித்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## இராசி பலன்

06.06.2005
(வைகாசி 23, திங்கட்கிழமை)
அமாவாசை பின்னிரவு 3.33 மணிவரை
ரோகினி பின்னிரவு 5.33 மணிவரை
இராகுகாலம் 7.22- 8.52 மணிவரை
சுபநேரம் 11.52 -1.22 மணிவரை
அமாவாசை விரதம்

| | |
|---|---|
| மேடம் | வேலைச்சுமை, எடுத்த காரியம் தாமதமாகும், பண விரயம், உறவினர் வெறுப்பு. |
| இடபம் | கற்பனை மிகுதி, நண்பர்கள் சந்திப்பு, காரிய அனுகூலம், போசன சுகம். |
| மிதுனம் | சுப செலவு, கோபப்படுதல், காரியதாமதம், உறவினர் சந்திப்பு. |
| கடகம் | குடும்ப மகிழ்ச்சி, எடுத்த கருமங்கள் கைகூடும், விருந்துபசாரம், பண வருவாய். |
| சிங்கம் | அதிகாரம், தூரதேசச்செய்தி, நல்ல வருமானம், முயற்சிகைகூடும். |
| கன்னி | கட்டுப்பாடு, பிரயாணம், எடுத்த காரியம் தாமதமாகும், பணவிரயம். |
| துலாம் | வீண் பிரச்சனை, காரியதடங்கல், பணப்பற்றாக்குறை, போசன சுகம். |
| விருச்சிகம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, விருந்துபசாரம், களஸ்திர நன்மை, புது முயற்சி. |
| தனுசு | தொழில் சிந்தை, நல்ல செய்தி, முயற்சி கைகூடும், போசன சுகம். |
| மகரம் | வியாபார நன்மை, புத்திரரால் கவலை, காரிய தாமதம், போசன சுகக் குறைவு. |
| கும்பம் | தாய்வழி உறவு, எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு, ரோக நிலை. |
| மீனம் | அன்னியர் சந்திப்பு, பிரயாண நன்மை, காரிய அனுகூலம், சுபசெய்தி. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

-வளவன்

மிகவிரைவில் எதிர்பாருங்கள் உங்கள் வலம்புரியில்

* மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி
* சித்திரப் போட்டி
* புகைப்படப் போட்டி
* சிறுகதைப் போட்டி

பெறுமதி மக்க பரிசில்களை வெல்லத் தயாராகுங்கள்
விபரம் மிகவிரைவில் உங்கள் வலம்புரியில்

## இன்று ஒரு தகவல்

# பொய் முகம்

“எனக்கு இருக்கும் குழப்பத்தில் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருக்கிறது சார்” என்றார் எனது நண்பர். ஏதோ இதுவரையில் அது பிடிக்காதது போல. மனதில் குழப்பம் இல்லாத மனிதன் யார்? “என் மனதில் குழப்பமே இல்லை சார். நான் மிகவும் தெளிவாக இருக்கிறேன்” என்று ஒருவர் கூறுகிறார் என்று வையுங்கள். அது அவரே அவரைப் பற்றித் தெரியாமல் கூறும் வார்த்தை.

இப்போது உங்கள் மனதில் குழப்பம் இருக்கிறதா இல்லையா? என்பதை நீங்களே தெரிந்துகொள்வதற்கு ஒருவழி இருக்கிறது என்கிறார் ஒரு பெரியவர். அது என்ன தெரியுமா? யாருமில்லாத இடத்தில் ஒரு தனி அறைக்குள் நுழைந்து பூட்டிக் கொள்ளுங்கள். ஒரு வானொலியில் ரெக்கோர்ட்போட்டு விடுங்கள்.

உங்கள் மனதில் வருவதை சிறிது கூட மறைக்காமல் சத்தம் போட்டுச் சொல்லுங்கள். என்ன தோன்றுகிறதோ அதை அப்படியே கூறிவிட வேண்டும். அதில் அர்த்தம் எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. ப்ரீயாகப் பேசுங்கள். சத்தம்போடுங்கள். கால் மணிநேரம் கழித்து நீங்கள் பேசியவற்றையெல்லாம் போட்டுக் கேளுங்கள். பைத்தியம் பிடித்த ஒருவரின் பேச்சை நீங்கள் கேட்டதுபோலவே தோன்றும்.

உங்களுக்குள் எவ்வளவு குழப்பம் உங்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கிறது என்று புரியும் எவ்வளவு அபத்தமான எண்ணங்கள் நமக்குள் இருக்கிறது என்பது புரியும். ஒன்றுக் கொன்று தொடர்பில்லாத துண்டுகள் நம் மனதுக்குள் மிதக்கின்றது என்பது விளங்கும்.

இது உண்மை. நீங்கள் வேண்டுமானால் பரீட்சித்துப்பாருங்கள. இதற்கு அர்த்தம் என்ன? பைத்தியக்கார விடுதியில் இருப்பவனுக்கு நூறு சதவீதம் பைத்தியம் பிடித்திருக்கிறது. நமக்கு அந்த அளவுக்குப் போகவில்லை அவ்வளவுதான். ஆனாலும் நமது நிலை வெளியில் தெரிவது இல்லை. வெளியே நாம் சரியான மனநிலையில் இருப்பதுபோல் தெரிகிறோம்.

மற்றவர்களிடம் நமது மனதுக்குள்ளே உள்ள அத்தனையையும் பேசுகிறோம். மற்றவர்களிடமிருந்து நாம் நிறைய மறைத்து விடுகிறோம். இதற்காக நாம் தினமும் காலையிலிருந்து இரவு தூங்கப்போகும் வரை சந்திக்கும் நபர்களுக்குத் தகுந்த மாதிரி நமது முகமூடி மாறிக்கொண்டே இருக்கும். இதில் நாம் மற்றவர்களை மட்டும் ஏமாற்றுவதில்லை. நம்மையும் நாமே ஏமாற்றிக் கொள்கிறோம்.

ஆளுக்குத் தகுந்த மாதிரி நமது முகத்தை மாற்றிக் கொண்டு பொய்முகத்துடன் காட்சியளிக்கிறோம் என்பதை நாம் கவனிப்பதில்லை. அதனால் நமது உண்மையான முகம் எது என்று நமக்கே தெரிவதில்லை. நமது பொய்களை நாமும் நம்பிக் கொண்டு மற்றவர்களையும் நம்பவைக்கும் காரியத்தைத்தான் செய்து கொண்டிருக்கிறோம்.

சரி இதெல்லாம் இருக்கட்டும். மனதில் இருந்து குழப்பங்களை நீக்குவது எப்படி? நிதான நிலையை அடைவது எப்படி? என்று கேட்டால் அதற்கும் பதில் சொல்கிறார் அந்தப் பெரியவர்.

ஒரு பைத்தியக்காரன் என்ன நினைக்கிறான் என்றால் மற்றவர்களைப் பைத்தியம் என்று நினைக்கிறான். தனக்குப் பைத்தியம் என்பது அவனுக்கு தெரிய ஆரம்பித்துவிட்டால் அதை அவன் உணர ஆரம்பித்தால் அவன் நிதான புத்தியை அடைய வாய்ப்புள்ளது என்று கூறிவிடலாம்.

அதனால் நாம் செய்யவேண்டியது என்ன தெரியுமா? நாம் நிதானம் தவறிய நிலையில் இருப்பதை முதலில் ஒத்துக் கொண்டு அதை நன்கு உணர்ந்துவிட்டால் போதும் நிதான நிலைக்கு நாம் முன்னேறி விடலாமாம். நமக்கு ஏற்படும் விளைவுகளுக்கு நாம்தான் பொறுப்பு என்பதை மனதில் இருத்திக்கொள்ள வேண்டும்.

நமக்குள் ஒரு சரியான மையத்தை ஏற்படுத்தி அதில் நமக்கு நாமே எஜமானனாக உட்கார்ந்து கொள்ளவேண்டும். சரியான திசையில் நம்மை நாமே கொண்டு செல்லவேண்டும். இந்த வேலையில் நாம் தீவிரமாக செயற்பட்டால் அதன் பின்பு நாம் பொய்முகத்துடன் அலைய வேண்டிய அவசியமில்லை.

உண்மை முகத்துடன் நிதான நிலையில் பேரானந்தம் அடையலாம். சிரித்து வாழலாம். இப்படியெல்லாம் பெரியவர்கள் கூறுகின்றனர். நம் அளவிற்கு இவை எந்தளவு சாத்தியமென்று தெரியவில்லை. இருந்தாலும் முயற்சி செய்வோம். முடிந்தளவு முன்னேறுவோம். நமக்குத் தெரிந்த முகம் வேறு மாதிரி.

ஒரு ஆள் இன்னொருவனிடம் கேட்டான். “ஏன் சார் இந்த உலகத்தில் ஒரே மாதிரி முகத்துடன் ஒன்பது பேர் இருப்பதாக சொல்கிறார்களே அது சாத்தியமா?” என்றான். “சாத்தியம்தான் ஏன் அப்படிக் கேட்கிறாய்?” என்றான் அவன். “அதற்கில்லை போன மாதம் உன்னிடம் நான் வாங்கியிருந்த ஆயிரம் ரூபாயை நேற்று உன்னை மாதிரியே இருந்த ஒருவன் வந்து திரும்பி வாங்கிக் கொண்டுபோய் விட்டான் அதனால்தான் கேட்டேன்” என்றான் இவன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அரச ஊழியர்களுக்கு விசேட சலுகை!

# வீடு புனரமைப்பு கடன் தொகையை திருப்பிச் செலுத்தத் தேவையில்லை

(கொழும்பு)

சுனாமியினால் சேதமடைந்த வீடுகளை திருத்திப் புனரமைப்பதற்காக அரசாங்கத்திடமிருந்து கடன் பெற்றுக்கொண்ட அரசாங்க ஊழியர்கள் அந்தக் கடனைத் திருப்பிச்செலுத்த வேண்டியதில்லை என்று பொது நிர்வாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

இதற்கான சுற்றுநிருபம் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. எனினும் வங்கிகளிலிருந்து பெற்றுக்கொண்ட கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சுனாமியினால் சேதமடைந்த அரசாங்க ஊழியர்களின் வீடுகள் பற்றிய விபரங்களை அமைச்சு மாவட்ட பிரதேச செயலாளர்களிடமிருந்து பெற்று வருகின்றது.

சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாகவும் அவர்களுக்கான உதவித் தொகைகள் தொடர்பாகவும் தவறான தகவல்களை வழங்கிய 9 கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் நடைபெற்று வருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

# உதைபந்தாட்ட போட்டிகளின் போது ஒழுக்கம் பேணப்படுதல் வேண்டும்

## விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை 4.30 மணிக்கு சென்ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு உதைபந்தாட்டப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இதில் யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் மற்றும் யாழ்.உதைபந்தாட்ட லீக்கினுடைய தலைவர் என்.திலிபோட் அத்தோனீப்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர்.

லீக்கினுடைய தலைவர் அங்கு உரையாற்றும் போது, இவ்வாறான உதைபந்தாட்டப் பொருட்கள் தொடர்ந்து கொடுக்கப்படும் என்றும், இந்த உதைபந்தாட்ட லீக்கிற்கு ஒரு காரியாலயம் அமைக்கப்படவுள்ளதாகவும், பாடசாலை உதைபந்தாட்ட மைதானங்களைப் புனரமைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் அவர் உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறும் போது ஏற்படும் அடிதடி ஒழுங்கினங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் மாதுளன் பேசுகையில்,

அண்மையில் போட்டி ஒன்று நடைபெற்ற பொழுது ஏற்பட்ட மோதல் காரணமாக உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்துவது தடைசெய்யப்பட்டது என்றும், இனிமேல் இவ்வாறு நடந்துகொண்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் முன்னாள் தலைவர் எஸ்.ரி.கணநாதன் மற்றும் யாழ்.உதைபந்தாட்ட லீக் மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவர் கப்டன் டி. என்.குணசிங்கம், யாழ்.உதைபந்தாட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் மாதுளன் ஆகியோர் பரிசுப் பொருட்களை வழங்கினார்கள். (அ-110)

# கொழும்பிலுள்ள புலி உறுப்பினர்களை கைதுசெய்யச் சாதாரண சட்டம் போதும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கொழும்பில் இருப்பார்களானால் அவர்களைக் கைது செய்ய சாதாரண சட்டம் போதுமானது என எதிக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர்களைக் கைது செய்யாமல் யுத்த நிறுத்த உடன்படிக்கையே அவர்கள் அங்கு தங்கியுள்ளதற்குக் காரணம் என்று கூறியுள்ளது அர்த்தமற்றது என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போது அதற்கு எதிராகக் குரல் கொடுத்தவர்கள் அந்த உடன்படிக்கையைத் தொடர்ந்தும் பேணிவருவதாக அவர் குறிப்பிட்டார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை தற்போதைய அரசாங்கம் எதிர்ப்பதாக இருந்தால் 14 தினங்களுக்கு முன்னர் நோர்வே அரசாங்கத்திற்கு அறிவித்து அதனைச் செயலிழக்கச் செய்து வேறு உபாயங்கள் மூலம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு இராணுவம் தேவையான நடவடிக்கை எடுக்கமுடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுக்கட்டமைப்பு சம்பந்தமாக கைச்சாத்திடும விடயத்தை ஜனாதிபதியே தீர்மானிக்க வேண்டுமென்று எதிர்க் கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (அ-9)

## பொன் சுகந்தனின்

# ‘வெளிச்சம் தேடும் விளக்குகள்’ நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பொன் சுகந்தனின் “வெளிச்சம் தேடும் விளக்குகள்” சிறுகதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு நெல்லியடி, முருகன் திருமண மண்டபத்தில் கலாசார பேரவைத் தலைவரும் கரவெட்டிப் பிரதேச செயலாளருமான சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் கலந்துகொள்கின்றார்.

இந்நிகழ்வில் வரவேற்புரையை கலாசாரப் பேரவைச் செயலாளரும் கலாசார உத்தியோகத்தருமான சே. செல்வகுணாவும், அறிமுகவுரையை நெல்லியடி மத்தியமகா வித்தியாலய ஆசிரியர் ஆ.சிவநாதனும், வெளியீட்டுரையை கலாசாரப் பேரவை உபதலைவர் தெணியானும், நூல் வெளியீட்டை பிரதம விருந்தினரும், ஆய்வுரைகளை யாழ்பல்கலைக்கழகக் கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணியும், வடக்கு-கிழக்கு மாகாண பதிப்பகத் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் எம்.எல்.ஏ.ஜபாரும், பதிலுரையை நூலாசிரியரும் ஆற்றவுள்ளனர். நூலின் முதற் பிரதியை செல்லமுத்து புடவை மாளிகை உரிமையாளர் சு.சண்முகசுந்தரம் பெறவுள்ளார். நன்றியுரையினை கலாசாரப் பேரவை உறுப்பினர் செ.சதானந்தன் ஆற்றுவார். (அ-5)

# கண்ணிவெடி அகற்றும் பணிக்கு 19 வாகனங்களை ஜப்பான் வழங்கும்

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதியில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான 19 வாகனங்களை அளிப்பதாக ஜப்பானிய் அரசு அறிவித்துள்ளது.

44 மில்லியன் ரூபாய் மதிப்பிலான அம்புலன்ஸ் உள்ளடக்கிய வாகனங்களை வடக்கு-கிழக்கில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொள்ளும் பணியில் ஈடுபட்டு வரும் டெனிஸ் அமைப்பிற்கு அளிப்பதாக ஜப்பான் தெரிவித்துள்ளது

இலங்கைக்கான ஜப்பானியத் தூதரகம் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை ஜப்பான் மொத்தம் 776 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள வாகனங்களை கண்ணிவெடி அகற்றும் நடவடிக் கைக்காக இலங்கைக்கு அளித்திருக்கிறது என அக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)

# மரக்கறி வாகனம் எரிக்கப்பட்டது

(திருகோணமலை)

திருகோணமலையில் அமைக்கப்பட்ட புத்தர் சிலைகக்கு பாதுகாப்பாகக் குவிக்கப்பட்ட படையினரை வெளியேற்றக் கோரி வடக்கு-கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலின் போது படையினருக்கு மரக்கறி ஏற்றும் கன்டர் ரக வாகனம் இனந்தெரியாத நபர்களினால் எரிக்கப்பட்டுள்ளது.

குறித்த கன்டர் ரக வாகனம் திருகோணமலையைச் சேர்ந்த முருகையா ஆனந்தன் என்பவருடையது எனத் தெரியவருகின்றது. படையினருக்கு நாளாந்தம் மரக்கறி விநியோகம் செய்யும் இந்த வாகனம ஹர்ததாலின் போது தீ மூட்டி எரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இக் ஹர்த்தாலின் போது வடக்கு-கிழக்கில் இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-8)

# அறிவியல் வளர்ச்சிக்கு ஆங்கிலம் மிக அவசியம்

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனைக்கு அமைவாக உருவாக்கப்பட்ட ஆங்கிலமொழிக் கல்வி நிறுவனம் இன்று ஒரு வளர்ச்சிப் படியினை எட்டியிருக்கின்றது என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஜெயந்தி நகர்ப் பகுதியில் அமைக்கப்பட்ட ஆங்கில மொழிப் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்று வெளியேறிய முதலாவது தொகுதி மாணவர்களுக்கான பாராட்டு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உலகில் பெருகிவரும் விஞ்ஞான மற்றும் அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப இன்று எமது மாணவர்களுக்கு ஆங்கில மொழி மிகவும் அவசியமானது. இதனை மேம்படுத்த ஆரம்பிக்கப்பட்ட ஆங்கில மொழிப் பயிற்சி நிறுவனத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் திறம்பட வழி நடத்திவருகிறது. இந்த நிறுவனத்தை எமது மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். (அ-4)

# தமிழகப் பயணம்

**பயணக் கட்டுரை**

# மேலாடையுடன் ஆண்கள் ஆலயத்திற்குள் செல்ல முடியும்

**என். விஜயன்**

10 காஞ்சிபுரக் கடைக்காரர்களின் பிடியில் இருந்து ஒரு மாதிரியாக விடுபட்டுக் கொண்டு ஏகாம்பரநாதர் கோவிலுக்குள் நுழைந்தோம்.

கருங்கற்களாலான ஏகாம்பரநாதர் கோவிலின் முன்மண்டபத்தில் உள்ள தூண்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிற்பங்களைத் தாங்கியவாறு அமைக்கப்பட்டிருந்தன. மண்டபத்திற்கு முன்னாக மூலஸ்தானத்தைப் பார்த்தவாறு அமைக்கப்பட்டிருக்கும் நந்தி அற்புதமாக இருந்தது.

ஆலயத்தின் மேற்கு வாசலிலும் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்திற்குள் சென்று ஏகாம்பரநாதப் பெருமானை வழிபட்டோம். மூலஸ்தானத்திற்கு மிக நெருக்கமாகச் சென்று வழிபடுவதற்கு தமிழகக் கோவில்களில் அனுமதியுண்டு. அதனால் மூலஸ்தானத்திலுள்ள சிவலிங்கப் பெருமானை மிகத் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக இருந்தது.

## மனப்போராட்டம்

மூலஸ்தானம் வரை சென்று வழிபடுவதில் எமக்குள் ஓர் தயக்கம் இருக்கவே செய்தது. அதற்குக் காரணம் எமது யாழ்ப்பாண கோவில்களின் கலாசாரமே!

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இங்கு ஆண்கள் மேலாடையுடன் கோவிலுக்குள் செல்லமுடியாது. 'ஆண்கள் மேலாடைகளை கழற்றி ஆலயத்திற்குள் செல்க' என்ற வாசகம் கோபுர நுழைவாயிலிலேயே தொங்க விடப்பட்டிருக்கும். இதனால் மேலாடைகளைக் கழற்றி ஆலயத்திற்குள் செல்லும் பழக்கத்திற்கு ஆளான நமக்கு, மேலாடையுடன் கோவிலுக்குள் செல்வது ஏதோவொரு குறைபாட்டைக் கொண்டிருப்பது போலவே இருந்தது.

எனினும், அதனை ஒருவாறு சமாளித்துக் கொண்டு ஆலயத்திற்குள் சென்றோம். ஆனால் அங்கு மேலும் ஒரு மனப் போராட்டம் ஏற்பட்டது.

யாழ்ப்பாணக் கோவில்களில், மகா மண்டபத்திற்கு வெளியே நின்று கடவுளை வழிபடுவதே வழக்கம்.

ஆனால் தமிழகக் கோவில்களில் மூலஸ்தானம் வரை சென்று கடவுளை வழிபட முடியும்.

மூலஸ்தானம் வரை செல்வது நம்மை அறியாமலேயே நமக்குள் ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்தியது. மாமிசம் உண்பவர்கள் மூலஸ்தானம் வரை செல்லலாமா? என்ற கேள்விகள் எங்களுக்குள் ஏற்பட்ட போதிலும், ஏகாம்பரநாதப்பெருமானின் அழகுமிகு தோற்றம் நம்மை ஈர்த்தெடுத்தது போல மூலஸ்தானம் வரை சென்று வழிபட்டோம்.

## அவர்களா? நாங்களா? செய்வது சரி

மூலஸ்தானம் வரை சென்று மூல மூர்த்தியை வணங்கிய பின்னர் அதுவே சரிபோலத் தெரிந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள கோவில்கள் பலவற்றில் மூலமூர்த்தியை கண்ணுக்குத் தெரியாமலேயே பலர் வணங்குகிறார்கள். சிவாச்சாரியர் காட்டும் கற்பு,ரதீப ஒளி தெரிந்தவுடன் உச்சியில் கைவைத்து அரோஹரா சொல்லி கும்பிடுகின்றோமே தவிர மூலமூர்த்தியை பலர் தெளிவாகப் பார்ப்பதேயில்லை. இதற்குக் காரணம் மூலஸ்தானத்திற்கும், அடியார்கள் நின்று வழிபடும் இடத்திற்குமிடையிலான மிகப்பெரிய தூரமாகும்.

குறிப்பாக எமது நல்லூர் முருகன் ஆலயத்தைக் குறிப்பிடலாம். நல்லூர் முருகன் ஆலயத்தில் மூலஸ்தானத்தில் இருக்கும் வேல் பலரின் கண்களுக்குத் தெரிவதில்லை. மூலஸ்தானத்தில் என்ன வடிவத்தில் முருகன் இருக்கிறார் என்பதே பலருக்குத் தெரியாது.

ஆக, கற்பூரத்தீபத்தைக் கண்டு 'முருகா' என்று வணங்கும் வழக்கத்திற்குப் பழகிப்போனவர்கள் நாம். அதனால் மூல மூர்த்தி தெரியவில்லையே என்பதை நாம் வெளியில் சொல்லாமல் மறைத்துக்கொள்கிறோம்.

ஆலயங்களை அமைத்ததே மனிதர்கள் வணங்குவதற்காக. மனிதர்களுக்காக ஆலயங்களே தவிர ஆலயங்களுக்காக மனிதர்கள் அல்ல. எனவே, பிரமாண்டமாகக் கோவில்களை அமைத்துவிட்டு, மூலஸ்தானத்தில் இருக்கின்ற மூலமூர்த்தியை கண்குளிரக்காணாதிருப்பது உணவைக் கையில் வைத்துக் கொண்டு பசியிருப்பது போல் அல்லவா! இருக்கும். அந்த வகையில் நோக்கும் போது தமிழ் நாட்டில் உள்ள கோயில்கள் சிறப்பாகச் செயற்படுகின்றன என்றே கூறவேண்டும். அங்கு எவரும் மூலஸ்தானம் வரை சென்று மூலமூர்த்தியை கண்குளிரக் கண்டு வணங்க முடியும். இது மனதிற்கும் திருப்திதருவதாக இருக்கும். ஒரு நாட்டில் உள்ள ஆலயத்தில் ஆண்கள் மேலாடையுடன் செல்வதற்கும் அடியவர்கள் மூலஸ்தானம் வரை சென்று மூல மூர்த்தியை வணங்குவதற்கும் அனுமதி உண்டெனில், அதை நாம் செய்யப் பின்னடிப்பது ஏன்? ஆகமங்கள், வேதங்களை காரணம் காட்டி வீட்டு பேசாது இருக்காமல் தமிழகத்து ஆலய வழிபாட்டு முறைகளை இங்கும் அறிமுகப்படுத்துவது பற்றி இந்து மத குருமார்களும், ஆலய அறங்காவலர்களும் சிந்திக்க வேண்டும் என்பது எமது தாழ்மையானவேண்டுகோள். (வளரும்)

## வைத்திய கலாநிதி வை.தியாகராசா அவர்களின் கௌரவிப்பு நிகழ்வின் சில காட்சிகள்....



யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி திருநாவுக்கரசு கமலநாதன் விருது வழங்குகிறார்.



அரங்கத்தில் அறிஞர்கள் புடைசூழ...



நிகழ்வில் கலந்துகொண்ட ஒருபகுதியினர்....

# ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள்

## கலாநிதி செ. திருநாவுக்கரசு 13

தமிழ் மக்களின் மரபுவழித் தாயகக் கோட்பாட்டைத் துண்டிக்கும் முகமாகத் திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களை ஊடறுத்துக் கடலின் மேற்கெல்லையாக அநுராதபுர மாவட்டம் வரை பிரதேசத்தை நீடிக்கக் கூடியதாக உருவான குடியேற்றத்திட்டமே வெலிஓயாத் (மணலாறு) திட்டமாகும். இது மகாவலி 'எல்' திட்டமென்ற பேரில் அழைக்கப்பட்டது. நாயாற்று ஏரிக்கு மேற்குப் புறம்பான 43 தமிழ்க் கிராமங்கள் இக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. 1971 இலிருந்து பல்லாயிரக் கணக்கான தமிழ்மக்கள் இப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர். முல்லைத்தீவுக்கும் புல்மோட்டைக்கும் இடையிலான கரையோரக் கிராமங்களான கொக்கிளாய், செம்மலை, நாயாறு போன்ற 20 தமிழ்க் கிராமங்கள் சிங்கள அநுராதபுர மாவட்டத்துடன் இணைக்கப்படும் நிலையேற்பட்டது. மேலும் 15.04.1988 அரச வர்த்தமானியில் 'வெலிஓயா' சிறப்புப் பிரதேசமென அறிவிக்கப்பட்டு அதன் எல்லைகளும் வரையறுக்கப்பட்டு உள்ளமையால், சுமார் 7500 தமிழ் பேசும் குடும்பங்கள் இடம்பெயர வேண்டிய அபாயமும் ஏற்பட்டது. தனியாருக்குச் சொந்தமான டொலர், ஜென் பண்ணைகளில் அமைக்கப்பட்ட இராணுவ முகாம்களும், முந்திரிகைத் தோட்ட நிலங்களில் ஆரம்பிக்கப்பட்ட சிங்களக் குடியிருப்புகளும் இத் திட்டத்தின் பாற்பட்டவையே. எனினும் 1983 இலிருந்து அதிகரித்துள்ள வன்முறை நிகழ்வுகளினால் இத்திட்டத்தின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட பாவற்குளம், உலுக்குளம், சிங்களக்குடியேற்றங்களும், எல்லைப் பகுதிகளான மாமடுவ, மடுக்கந்தைப் பிரதேசங்களிலுருவாகும் கிராம விஸ்தரிப்புத் திட்டங்களும், சிங்கள மீனவர்களுக்காக மன்னார், நாயாறு, புன்னைக்குடா, முல்லைத்தீவுப் பகுதிகளில் உருவான குடியேற்றங்களுங் கூடச் சிங்களக் குடியேற்ற வேகத்தினைத் தூண்டுவனவாகவே அமைந்துள்ளன.

மன்னார் மாவட்டத்தில் மண்வளம், காலநிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அநுராதபுர மாவட்டத்தில் எல்லையை அண்டி வில்பத்துக் காட்டுடன் இணைந்ததாக 6000 ஏக்கர் நிலப்பரப்பில் கொண்டச்சி கிராமத்தில் ஏற்படுத்திய முந்திரிகை பண்ணைகூடச் சிங்களக் குடியேற்ற இலக்கையே கொண்டிருந்தது. இப்பண்ணை 'கஜூவத்தை' என அழைக்கப்பட்டது. 1959 ஆம் ஆண்டு இப் பண்ணைக்காக சிங்களவர் இங்கு குடியேற்றப்பட்டனர். மடுவீதியை அண்டியபகுதிகள், பசுமையான சோலைக்காடுகள், தமிழர் குடியிருப்புகள் இல்லாத பகுதிகள் ஆகியனவே சிங்களவர் குடியிருப்புக்களுக்காகத் தெரியப்பட்டன. 1972 இல் மரமுந்திரிகை இலங்கையின் பன்முக ஏற்றுமதிப் பொருளாக மாற்றப்பட்டதுடன், மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் தோற்றுவிக்கப்பட்டது. 1972 இல் விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டப்படி இந்தப் பண்ணையானது 99% சிங்களவரைக் கொண்ட பெருந் தோட்டமாக மாறியது. இங்கு கொண்டுவரப்பட்ட சிங்களவருக்கு மன்னார் வாக்காளர் பட்டியலில் இடமளிக்கப்பட்டமை குறிப்பிடத்தகுந்தது. 1970 இல் 'குவேனி' தொகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டமையும் சமீபகால வன்செயல்களால் அதிகமான சிங்களவர் இடம்யெர்ந்தமையும் நோக்குதற்குரியனவாகும்.

தமிழர் பிரதேசங்களில் ஏற்படுத்திய சிங்களக் குடியேற்றங்களைக் காலத்துக்குக் காலம் இலங்கை அரசாங்கமானது நன்கு திட்டமிட்டே நிறைவேற்றியுள்ளமை புலனாகின்றது எனவும் இது சிறுபான்மையோரை, அவர்கள் பெரும்பான்மையாயுள்ள பகுதிகளில் சிறுபான்மையாக்கும் சதிமுயற்சியெனவும் தமிழர் தரப்பில் விமர்சிக்கப்படுகிறது. ஒரு நாட்டின் தேசிய இனங்களுக்கிடையேயான நல்லுறவைக் கெடுப்பதாக இம்முயற்சிகள் அமைகின்றன. இன்றைய இலங்கையின் இனப்பிரச்சினைக்கான காரணிகளுள் வலுவுள்ளதாகக் குடியேற்றம சம்பந்தமான பிரச்சினைகளேயுள்ளனவெனலாம். முன்பு ஏற்படுத்திக்கொண்ட தமிழர்- சிங்களவர்களுக்கான ஒப்பந்தங்களிலெல்லாம் இக்குடியேற்றப் பிரச்சினைகள் முதன்மை பெற்றிருப்பதை நோக்கும்போது இதன் முக்கியத்துவம் விளங்குகின்றது.

இலங்கைத் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் நிலை இவ்வாறிருக்க, இந்தியத் தமிழர்கள் தொடர்ச்சியாகவும் நெருக்கமாகவும் வாழுகின்ற மலைநாட்டுப் பகுதிகளிலும், "அவர்களை வெளியேற்றும் முயற்சிகளும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் நடைபெறுவதாகப் பல புகார்கள் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக, நட்சா, கிராமத்தோட்ட ஒன்றிணைப்பு, நிலச்சீர்திருத்தம் போன்ற அரசாங்கம் மலையகத்தில் மேற்கொண்ட சகல திட்டங்களும் மலையகத் தமிழரை வெளியேற்றிவிட்டு, அவர்கள் குடியிருக்கும் அல்லது தொழில் புரியும் காணிகளைச் சிங்களக் கிராமவாசிகளுக்கு மீட்டுக்கொடுப்பதையே இலக்காகக் கொண்டிருந்தன என மாவலியான் எழுதிய நூலொன்றில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. மேலும் அதில் சர்வதேச நிறுவனமொன்று தோட்டத் தொழிலாளருக்காக 1981 இல் பூர்த்தி செய்து கொடுத்த வீடமைப்புத் திட்டத்தில், நிர்வாகத்தினதும் இனவாத அரசியல்வாதிகளினதும் அனுசரணையுடன் வெளியிடங்களிலுள்ள சிங்களவர் பலாத்காரமாகக் குடியேறிய நிகழ்ச்சியானது மலையகப் பகுதிகளில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றக் கொள்கைகளுக்கோர் மாதிரியாகும். காணிப்பங்கீடு என்ற பெயரில் 'சொய்சி' தோட்டத் தொழிலாளரை வெளியேற்றிவிட்டு, சிங்களக் கிராமவாசிகளுக்குக் கொலனியொன்று அமைத்துக் கொடுத்தமை, 'டெவன்', தோட்டத்தைக் கொலனியாக்குவதற்கு, எடுத்த முயற்சிகள் தொழிலாளரின் கடும் எதிர்ப்பினால் கைவிடப்பட்டமை, 'நட்ஷா' திட்டத்தின்கீழ் ஆயிரக்கணக்கான ஏக்கர் தோட்டங்கள் கொலனிகளாக மாற்றப்பட்டமை, 'மாதிரிக்கிராமம்' என்ற போர்வையில் தேசிய இன உறவுகளைப் பாதிக்கக்கூடிய சிங்களக் குடியேற்றங்களை நிறுவி வருகின்றமை காடுகளை மீள உருவாக்கும் கவர்ச்சிரமான திட்டத்தின்கீழ் நாசூக்காகத் தோட்டத் தொழிலாளரை வெளியேற்றிவிட்டு அத்துமீறிய சிங்களக் கிராமவாசிளின் குடியேற்றங்களுக்கு ஊக்கமளிக்கின்றமை நகர விரிவாக்கத் திட்டங்களில் தோட்டப்புற நகரங்களை சிங்கள மயப்படுத்தி வருகின்றமை (உதாரணம்:- மெனிக் ஹின்ன நகரம்) ஆகிய பல முயற்சிகளினூடு இந்தியத் தமிழர் வாழ்விடங்களில் சிங்களக் குடியேற்றவாதம் தீவிரங்காட்டி நிற்கிறது எனவும் கூறப்பட்டுள்ளது.

ஒரு தேசிய இனத்தின் ஆதாரமாயுமைந்தவற்றுள் ஒன்று மரபு வழித் தாயகமாகும். அதனைக் காப்பாற்றிக் கொள்ளவே இலங்கையின் தமிழ்பேசும் மக்கள் பிரயத்தனப்படுகின்றார்கள். அதற்கு மாறாகச் சிறுபான்மையினங்களின் தாயகக் கோட்பாட்டை முறியடிக்கவே பெரும்பான்மையின் அரசு இத்தகைய 'குடியேற்றங்கள்' மூலம் பகீரதப் பிரயத்தனஞ் செய்கிறது என்ற குற்றச்சாட்டுகள் ஏராளமாகவே எழுக்கின்றன. கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதேசங்களில் ஏற்படுத்திய சிங்களக் குடியேற்றம் பற்றி எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் 1964 இல் கூறிய,

'குடியுரிமைச் சட்டங்களும், அரசாங்கப் பண உதவியுடன்
நிகழும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும் இன்று
கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களுக்கு நேரடியான ஆபத்தைத்
தோற்றுவித்துள்ளது. ஒரே தொடர்பான பிரதேசத்தில்
தம்மக்கள் மத்தியில் பெருந்தொகையாக வாழ்ந்து, அந்த
முஸ்லிம் சூழலிலே தமது மதத்தையும் மொழியையும் வளர்த்துப்
பெருமையுடன் பெரும்பான்மையினராகத் தலை நிமிர்ந்து வாழும்
முஸ்லிம் மக்கள் இன்று தமது சொந்தப் பிரதேசத்திலேயே
சிறுபான்மையினராகி வருகின்றார்கள்."

(தொடரும்)

# முத்தலிப் படுகொலை விவகாரம்; உளவாளியே உளவு பார்த்தாராம்

(கொழும்பு)

இலங்கைப் புலனாய்வுப் பிரிவின் கட்டளை அதிகாரியான முத்தலிப் பற்றிய தகவல்களை துப்பாக்கிதாரிகளுக்கு வழங்கியது அவரிடம் உளவாளியாகப் பணியாற்றிய ஒருவரே எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முத்தலிப்பிடம் உளவாளியாகப் பணியாற்றிய ஒருவராலேயே அவர் பற்றிய தகவல்கள் துப்பாக்கிதாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டிருப்பதாக கிடைத்திருக்கும் தகவல் குறித்து இரகசியப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முத்தலிப்பின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வதற்காக நம்பிக்கைக்குரிய வகையில் பல தகவல்களை முத்தலிப்பிற்கு வழங்கி அவரின் போக்குவரத்துக்கள் பற்றிய தகவல்கள் அந்த உளவாளி சேகரித்திருக்கலாம் என்ற பலத்த சந்தேகம் தங்களுக்கு எழுவதாக, முத்தலிப்பின் கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் இரகசியப் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தி விரிவான விசாரணைகளை மேற்கொள்ளும் வகையில் இரகசியப் பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

முத்தலிப்பின் கொலை சம்பந்தமான தகவல்களைப் பெறும் நோக்கில் இராணுவத்தின் பல தரப்பு அதிகாரிகளிடம் இரகசியப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருப்பதாகவும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

முத்தலிப் படுகொலை செய்யப்பட்ட தினத்தன்று அவரின் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் வேறு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை விசாரணைகளிலிருந்து தெரிய வந்திருப்பதாகவும் அந்த இரகசியப் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

முத்தலிப்பின் பாதுகாப்பு வீரர்கள் அன்றைய தினம் அவரின் பாதுகாப்பிற்குச் செல்லாது வேறு எந்த நடவடிக்கைகளுக்காகச் சென்றனர் என்றும் அவ்வாறு செல்லுமாறு அவர்களுக்கு யார் உத்தரவு பிறப்பித்தது என்றும் அறிந்துகொள்வது இந்த விசாரணைகளை முன்நகர்த்த பெரும் உதவியாக இருக்கும் எனவும் அதனால் அந்த விடயங்களை அறிய இரகசியப் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)

# வடமராட்சி கிழக்கில் சேதமடைந்த வீதிகள்; பொதுமக்கள் விசனம்

(கிளிநொச்சி)

வடமராட்சி கிழக்குப் பகுதியின் வீதிகளைத் திருத்த சம்பந்தப்பட்டவர்கள் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனப் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதி வீதிகளைத் திருத்துமாறு இப்பகுதியில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கடற்தொழிலாளர் சங்கங்கள் என்பன சம்பந்தப்பட்டவர்களிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தும் இதுவரை வீதிகளைத் திருத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இப்பகுதி வீதிகள் பல சுனாமியால் பெரிதும் பாதிப்படைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ற-43)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட எமக்கு உதவ எந்தவொரு நிறுவனமும் முன்வரவில்லை

## வடமராட்சி வர்த்தகர்கள் குற்றச்சாட்டு

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு உதவ எந்தவொரு நிறுவனமும் முன்வரவில்லையென இப்பகுதி பொது அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இப்பகுதியில் இருந்த வர்த்தக நிலையங்கள் அனைத்தும் சுனாமி அனர்த்தம் காரணமாக முற்றாகப் பாதிப்படைந்துள்ளன.

இந்த நிலையில் இப்பகுதி வர்த்தகர்கள் முழுமையாகப் பாதிப்படைந்த சூழ்நிலையில் தமக்கு தொண்டு நிறுவனங்கள் உதவ வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தும் இதுவரை எந்தவொரு தொண்டு நிறுவனமும் தமக்கு உதவவில்லை என இவர்கள் தெரிவிக்கின்றனர்.(ற-43)

## அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தில்

# தேங்கியுள்ள நீதிமன்ற அறிக்கைகள் இவ் வருடத்தினுள் விநியோகிக்கப்படும்

(கொழும்பு)

அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களத்தில் தேங்கிக் கிடக்கும் நீதிமன்ற அறிக்கைகள் அனைத்தும் இந்த வருடம் முடிவடைவதற்குள் விநியோகிக்கப்பட்டு விடும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே 70ஆயிரத்து500 நீதிமன்ற அறிக்கைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

சட்டவிரோத மதுபானம், மருந்துப் பொருட்கள் சம்பந்தப்பட்ட அறிக்கைகளும் இவற்றில் அடங்கும்.

திணைக்களம் ஆரம்பித்துள்ள புதிய திட்டம் ஒன்றின் கீழ் அடுத்த வருடம் தொடக்கம் சகல அறிக்கைகளையும் தாமதமின்றி விநியோகிக்க முடியுமென்று அரசாங்க பகுப்பாய்வாளர் இ.ஜி.சோமபால தெரிவித்துள்ளார். (ற-9)

# 'இலங்கை இளைஞர் பாராளுமன்றம்' கொழும்பில் ஐந்து நாள் செயலமர்வு

(கொழும்பு)

'இலங்கை இளைஞர் பாராளுமன்றம்' என்ற தலைப்பிலான ஐந்து நாள் செயலமர்வு ஒன்று எதிர்வரும் ஓகஸ்ட மாதம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளதாக சர்வதேச ஆய்வுகளுக்கான பண்டாரநாயக்க நிலையம் தெரிவித்துள்ளது.

14 வயதிற்கும் 25வயதிற்கும் இடைப்பட்ட 225 இளைஞர்கள் இந்த செயலமர்வில் கலந்து கொள்வார்கள்.

பொதுமக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது பற்றி கருத்துக்கள் தெரிவிப்பதுடன் தங்களுக்கிடையில் எண்ணங்களைப் பரிமாறிக்கொள்வதற்கும் இந்த செயலமர்வு இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும்.

இந்தத் திட்டததின் கீழ் பாடசாலைச் சிறுவர்கள் சமுதாய தலைமைத்துவத்திற்கும் பங்களிப்புச் செய்வதற்கும் நாட்டின் சமூக பொருளாதார மேம்பாடுகளுக்கான திட்டங்களைத் தயாரிப்பதற்கும் ஊக்குவிப்பு அளிக்கப்படுமென்று வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார். (ற-9)




## உழைப்பின் மாட்சி!

உன் முயற்சிக்கு
உறுதுணையாக
எருதுகளிரண்டுமே
ஏறுநடை போட்டு
இரவென்றும் பாராது
இலக்கு நோக்கி
இயங்கும் காட்சி - உழைப்பின்
இனியமாட்சியே!


கு.குகநாதன்.
புலோலியூர்.

## நன்றியுள்ள ஜீவன்கள்

நித்தம் ஏற்றும் சுமைகளினால்
செத்தல் ஆனது எம் உடம்பு
களைப்பால் தாகம் எடுத்தாலும்
கால்கள் வலிமை இழந்தாலும்
நன்றி உள்ள ஜீவன்களாய்
ஏற்றிய சுமைகளைப் பக்குவமாய்ப்
இழுப்போம் எம் உயிர் பிரியும்வரை.

ம.கீதா,
யாழ்ப்பாணம்.

# மௌனத்தின் தேடல்கள் -61



## கமக்காரன்!

காலையில் நித்திரை
விட்டெழுந்து
காணிக்கு வண்டியில்
சென்று
கதிரறுக்கும் வேலையைச்
செய்து
கதிர்க்கற்றைகளைக் கட்டி
காளைகள் பூட்டிய
வண்டியலேற்றி
கம்பீரமாக வருகின்றான்
கமக்காரன்!

திருமதி. P.S.ராணி,
வட்டுக்கோட்டை.

## எம் கையை நம்புவோம்!

தரிசு நிலத்தை ஏர்முனையில் களனி யாக்கி - அதில்
விளைந்த் விளைவை மாட்டுவண்டியில் ஏற்றி
மனமகிழ்வுடன் வீடு செல்லும் உழவா!
எம் சொத்து எம்மிடமிருக்கையில்
பிறர் கையை ஏன் ஏந்தவேண்டுமென
உவகையுறுகிறாயா?

பொ.புனிதன்,
வரியப்புலம்.

## நன்றி!

அந்நாளிலுங்கள் சேவை
அளப்பரியது - எமக்கு
இந்நாளில் 'ஹயேஸ்'
'கார்கள்' ஈடாகுமெனினும்
எந்நாளும் உமை மறவோம்
காளைகளே! நன்றி!!

ஜெ.சுபாஜினி,
செம்மணி வீதி.

## காளைகளின் உறுதி

நெற்றி வியர்வை
நிலத்தில் சிந்தி
அயராது பாடுபட்டு
தனது வயிற்றை நிரப்புவதோடு
எமது வயிற்றை நிரப்பும்
ஏழை உழவன் -இவன்
வாழ்வு ஒளிமயமாக
பூமித்தாயுடன் போராடுவோம்
எம் இறுதிவரை...!

S.கஜசங்கவ்,
இணுவில்.

## உழவின் சிறப்பு

நாடு நவீனமயமானாலும்
மக்கள் நாகரீகமாக மாறினாலும்
இவர்களைத் தாங்கி நிற்கும்
உழவுத் தொழிலின் பெருமையை
உணராது வேற்றுத் தொழில் தேடி
அலைகின்றனரே!
இயற்கையன்னை கொடுத்த
கொடையைப் பயன்படுத்தாது
மூடர்களாய் அலைகின்றனரே!
இவர்களின் அறியாமை என்றுதான்
நீங்குமோ உழவின்
சிறப்பு என்று வாயுயருமோ...!

N.நிகா, உடுவில்.

## கவி வடிக்க முடியவில்லை!

அந்த நாட் பொழுதுகளில் அவனியிலே
கவிகள் பல புனைந்தார் கவிஞர்
கூடிக்குலவும் கிளி குயில் பறவைகளை
பூவில் தேன் தீண்டும் சிறிய வண்டினத்தை
வானைத் தொடுத்தபடி
அலைமோதும் கடல் நிலையை
செக்கச் சிவந்த சூரியனை
பால் நிலவெறிக்கும் சந்திரனை
பாடினார் பாடினார் பரவசமாய்ப்
பாடி வடித்தார் ரசித்துக் கவி வரியில்....



காலைக்கும் மாலைக்கும் அவர் வடித்த
காட்சிகளை ஏன் வடிக்கமுடியவில்லை இன்று...?
அலுவலகம் போகும் அவசரம் விடியலிலே
மாலையிலே திரும்பிவர ரீவிகள் வரவேற்கும்
தொலைபேசி தொடர்பு கொள்ளும்
கணனியிலே கருத்துப் பரிமாற வேண்டிவரும்
நாட்பூரா இப்படியே நகர்கையிலே
ரசிப்பதற்கிப்போ நேரமுண்டோ...?
ஆதலால் ரசித்துக் கவி வடிக்க முடியவில்லை!
வானம் முட்டிய பல மாடிக் கட்டடத்துள்
பால் நிலவெறிக்கும் சந்திரனைப் பாட முடியவில்லை
தொடரடுக்கு மனைகளுக்குள்
செக்கச் சிவந்த சூரியனைக் காணமுடியவில்லை
போரினால் அழிந்துபோன பூங்காக்களில்
தேன் தீண்டு வண்டினங்கள் இல்லை இப்போ
ஆதலால் கவி வடிக்க முடியவில்லை அவற்றை

இருந்தும் சீரழியும் சமாதானத்தை
சித்திரவதைப்படும் கலாசாரத்தை
பாழடையும் பண்பாடுகளைப்
பாடுகின்றோம் - மீதிருப்பின்
இன்ரநெற் காதலை இளசுகளின் சேட்டைகளை
கொடுமையுறும் சீதனத்தை
கொண்டெல்லாம் கவி வடிப்போம் இவற்றில்!

ஜெ.சுபாஷினி.
செம்மணி வீதி.

## வந்து விடு!

என் விழிகள் மூடியிருக்க
மனசு மட்டும்
விழித்திருக்கிறது
உன்னைப் பற்றிய
ஆயிரம் கனவுகளுடன்...
இன்று நேற்று நாளை
என்று நாட்கள்
நகர்கின்றன!
வார்த்தைகளில் மட்டும்
வாழ்ந்து சென்றாய்
மனசிற்குள் ஓர் சிலிர்ப்பு
அதற்குள்ளும் எத்தனை
தடவைகள் ஊடலும்
நேசமும் உன்னுடன்....
முடியுமானவரை
முயற்சிக்கிறேன்
உன்னை காண்பதற்கு!
முடிந்தால் வந்துவிடு
என் முகவரிக்கு!
சிதறிக்கிடப்பவை
நினைவுகள் மட்டுமல்ல
உன் கனவுகளும்தான்.

K.யாமினி, ஏழாலை.

## என்னுயிரே!



உயிரிங்கு வாடுது
உனைத்தானே தேடுது
உன் வரவை நாடியே
உயிர் நாடி துடிக்குது

உன்னோடு வாழத்தான்
உலகுக்குள் நுழைந்தேன்
உன்னோடு சேரத்தான்
உயிரோடு உலவுகிறேன்

உன் ஸ்பரிஷம் காணவே
உணர்வுகளைத் தாங்கினேன்
உன் பாஷை புரியவே
உண்மைகளைக் கேட்கின்றேன்

உறவுக்குள் எல்லாம்
உயர்வுற்று நிற்பவளே!
உண்மையில் உன்னை
உறவென்று நினைக்கவில்லை
உயிராக நினைக்கிறேன்.

T.M.ஜெகன்,
வராத்துப்பளை.

# மௌனத்தின் தேடல்கள் - 63



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் உள்ளத்து உணர்வுகளை மிகச் சிறிய கவிதைகளாக்கித் தபால் அட்டையில் வலம்புரி - சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள். கிடைக்கவேண்டிய இறுதித் திகதி - 12.06.2005

அனுப்பவேண்டிய முகவரி:- மௌனத்தின் தேடல்கள்- 63

**வலம்புரி - சங்குநாதம்**

15, வெள்ளாந்தெரு, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

## நீ கேட்டுப்பார்



அழகாய் சிறகடிக்கும் பறவையிடம்
கேட்டுப்பார்
மௌமாய் மலரும் பூக்களிடம்
கேட்டுப்பார்
பூக்கள் மேல் ரீங்காரம் இசைக்கும் தேனியிடம்
கேட்டுப்பார்
பூமியினை முத்தமிடும் மழைத்துளியிடம்
கேட்டுப்பார்
வீதியோரம் காய்ந்து கிடக்கும் முற்களிடம்
கேட்டுப்பார்
சுட்டெரிக்கும் சூரியனிடம் எட்ட நின்று
கேட்டுப்பார்
சில்லென வீசும் தென்றலிடம் சிணுங்கியபடி
கேட்டுப்பார்
சிரித்து நிற்கும் செந்தாமரையிடம் சோர்ந்திடாமல்
கேட்டுப்பார்
உன் மேல் நான் கொண்ட காதலின்
சுவடுகள் மாறாதிருப்பதை - சுவையாக
அவை சொல்ல மறவாமல் கேட்டுப்பார்!

நா. பற்றீஷியா,
யாழ்ப்பாணம்.

## பிரியமானவனுக்கு...



பூட்டி இருந்த என்
இதயக் கதவினை
புன்னகை என்னும் பூட்டினால்
மெல்லத் திறந்தாய்
யாரும் அற்ற அனாதை இவளுக்கு
உறவு என்று வந்து
ஒட்டிக்கொண்டவள் நீ
சோகங்கள் சொந்தங்கள் என்று
வாழ்ந்து இருந்த எனக்கு
அன்புக்கு அர்த்தமும் சொன்னாய்!
என் உயிர் மூச்சு நீயே என்று
வாழ்ந்து இருந்தேன் - இன்று
என்னை விட்டு நீண்டதூரம்
சென்றது ஏன்...?
இதுதான் விதியன்றோ - அன்பே!
நீயும் நானும் சேர்ந்திடும் ஓர்
இனிய நாளும் இங்கு வாராதோ
அதுவரை காத்திருப்பேன் உனக்காக
என் உயிர்மூச்சு உள்ளவரை....

# ஐ.நா செயலாளர் பதவிக்கு போட்டியிடும் இலங்கை

முதலாம், இரண்டாம் உலகப் போரினால் ஏற்பட்ட விளைவுகளின் பலனாக, உலக சமாதானத்தையும் பாதுகாப்பையும் அத்துடன், சர்வதேச மனித உரிமையையும் நிலைநாட்ட 1948ஆம ஆண்டு உதயமானதே ஐக்கிய நாடுகள் சபை. இதன் ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை ஏழு செயலாளர் நாயகங்கள், இவ் அதி உயா்ந்த உலக நடுநிலை ஸ்தாபனத்தில் கடமையாற்றியுள்ளனர்.

தற்போதைய செயலாளர் நாயகமாகிய கொபி அனானின் சேவைக்காலம் 2006ஆம் ஆண்டு மார்கழி மாதத்துடன் முடிவடைய உள்ளது. ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கான நியமனத்தை, ஐ.நா பாதுகாப்பு சபையின் சிபாரிசில் பொதுச்சபை நியமிக்கும். இந்த நியமனம் பூகோள அடிப்படையிலானது. இந்த ரீதியில், கொபி அனானின் பதவிக்காலம் முடிவுற்றதும், இப் பதவிக்கான அடுத்த நியமனம் ஆசிய கண்டத்திற்கே உரியதாக நம்பப்படுகிறது.

இதுவரையில் கடமையாற்றிய செயலாளர் நாயகங்கள் நோர்வே, சுவீடன், மியான்மார் (பர்மா), ஒஸ்திரியா, பேரு, எகிப்து, கானா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். இதில மியான்மாரை சேர்ந்த யூ.தாண்ட் உதவிசெயலாளர் நாயகமாக கடமையாற்றிய வேளையில், செயலாளர் நாயகமாக பதவி வகித்த சுவீடன் நாட்டைச் சேர்ந்த டக்கமார் ஜொல்ட் 1961ஆம் ஆண்டு விமான விபத்து ஒன்றில் மரணமானதைத் தொடர்ந்து, யூ.தாண்ட் ஐ.நா.செயலாளர் நாயகமாகப் பதவி ஏற்றார்.

இந்த ரீதியில் யூ.தாண்ட் ஆசியா கண்டத்திலிருந்து பதவி வகித்த முதலாவது ஐ.நா செயலாளர் நாயகமாக விளங்கினார். தற்போது ஆசியா கண்டத்தில் சூடுபிடித்துள்ள செயலாளர் நாயகத்திற்கான வேட்பாளர் நியமனம், ஆசியாவில் பல நாடுகளுக்கு இடையே பல சச்சரவுகளை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் உலகத்தையே ஆட்டிப்படைக்கும் அமெரிக்கா, இவ் விடயத்தில் மிக மௌனமாக இருக்கிறது. இதையிட்டு பலர் ஆச்சரியப்படுகின்றார்கள். சில ஆய்வாளர்களின் கருத்துப்படி, அமெரிக்கா ஆசிய நாட்டிலிருந்து எதிர்பார்க்கவில்லையாம்.

காரணம், அமெரிக்காவின் கைப்பொம்மையாக அண்மைக் காலங்களில் விளங்கிவரும் கிழக்கு ஐரோப்பாவிலிருந்தே, அடுத்த ஐ.நாவுக்கான செயலாளர் நாயகத்தை அமெரிக்கா விரும்புகின்றதாம்.

கிழக்கு ஐரோப்பாவிலிருந்து செயலாளர் நாயகத்திற்கான நியமனம், ஓர் வழியில் நியாயமானதாயும் கூறப்படுகிறது. காரணம், மிக அண்மைக்காலங்களில கிழக்கு ஐரோப்பா ஓர் தனித்துவம் கொண்ட பூகோளப்பிரிவாக ஐக்கிய நாடுகள் செயற்பாடுகளினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இது இப்படியாக இருக்க, இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த டிசம்பா மாதம் ஜயந்த தனபால இலங்கை சார்பில் ஐ.நா.செயலாளர் பதவிக்குப் போட்டியிட உள்ளதாக அறிவித்துள்ளார்.



இவ்வேளையில், இலங்கை இந்த அதியுயர்ந்த நடுநிலையாளரின் பதவியை அடைய தகுதியுள்ளதா என்பதை நாம் ஆராய்வது மிக அவசியம். அப்படியாக ஆராயுமிடத்தில் இலங்கையின் அரசியல் நிலைமைகள், இலங்கை ஐக்கிய நாடுகள் சபை மீது கொண்டுள்ள நம்பிக்கை மற்றும் கௌரவம், அத்துடன் 'இப் பதவிக்கு போட்டியிட நியமிக்கப்பட்ட வேட்பாளர் ஜயந்த தனபால பற்றி, தனித்தனியாகப் பார்ப்பது சாலச்சிறந்தது.

## இலங்கை நிலைமைகள்

தீவான இலங்கையில் இருபது வருடத்திற்கு மேலாக இரத்தக் களரிகள் கொண்ட இன ரீதியான மாபெரும் யுத்தம், இத்தீவில் வாழும் தேசிய இனமான தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை இலங்கை ஏற்க மறுத்ததினால் ஏற்பட்டது. இதன் விளைவாக இத்தீவில் 79 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டும், காணாமல் போயும் உள்ளனர்.

அதேவேளை, 13 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்ப் பெண்கள் இலங்கை அரச படைகளினால் பாலியல் வல்லுறவுக்குட்பட்டு கொலை செய்யப்பட்டுமுள்ளனா. இவற்றின் காரணமாக எட்டு லட்சத்துக்கு மேலான தமிழ் மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தும், ஐந்து லட்சத்துக்கு மேலானோர் வெளிநாடுகளில் தஞ்சம் கோரியும் உள்ளனர்.

## ஐ.நா. மீதான கௌரவம்!

இலங்கையின் மனித உரிமை மீறல்களை பார்த்து சகிக்க முடியாத ஐக்கிய நாடுகள் சபை, இதன செயலாளர் நாயகங்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள கண்டனங்களைத் தெரிவித்த காரணத்திற்காக, இலங்கை அரசினால் கௌரவக் குறைவாக நடத்தப்பட்டும் இம்சிக்கப்பட்டனர்.

1. 1995ஆம் ஆண்டு யூலை மாதம் நவாலித்தேவாலயப் படுகொலையை இட்டு செய்தி வெளியிட்ட செஞ்சிலுவைச் சங்கம் இலங்கை அரசினால் கடுமையாக எச்சரிக்கப்பட்டது.

2. 1995ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நாகர்கோவிலில், பாடசாலையில் வைத்து சிறுபிள்ளைகளை படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்த ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான கலாசார ஸ்தாபனம், இலங்கை அரசினால் எச்சரிக்கப்பட்டது.

3. 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத இடப்பெயர்வையிட்டு தனது கருத்தை வெளியிட்ட ஐ.நாவின் செயலாளர் நாயகம் பூட்டஸ் காலி இலங்கை அரசினால் இம்சிக்கப்பட்டார்.

4. 1999ஆம் ஆண்டு செப்டமபர் மாதம், ஓர் படுகொலையையிட்டு அறிக்கை வெளியிட்ட ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தை, 'உங்கள வேலை, மலேரியா தொற்றுநோய் உலகில் பரவாமல் பார்ப்பதே. அதை விட்டுவிட்டு, எங்கள் உள் நாட்டு விடயங்களில் தலையிடாதீர்கள்' என்று இலங்கை அவமானப்படுத்தியது.

5. கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்கு மனிதாபிமான விஜயத்தை மேற்கொண்ட ஐ.நா செயலாளர் நாயகம் கொபி அனானின் மனித உரிமையே இலங்கையில்

**இணையப் பார்வை**

பறிபோனது இங்கு குறிப்பிடத்தக்கது. செயலாளர் நாயகம் தனது கடமையை சுதந்திரமாக செய்யும் உரிமையை மறுத்த பெருமை இலங்கைக்கே உரியது.

இப்படியாக பல தடவை இலங்கையினால் கௌரவ குறைவாக நடத்தப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும், இம்சிக்கப்பட்ட அதே நிறுவனத்திற்கு இலங்கை தற்போது தனது வேட்பாளரை முன் வைப்பது பெரும் வேடிக்கையானது.

## யார் இந்த வேட்பாளர்?


இலங்கையினால் ஐ.நா செயலாளர் பதவிக்கு போட்டியிட நியமிக்கப்பட்ட ஜயந்த தனபால ஓர் முதிர்ந்த இராஜதந்திரியாக இருந்தாலும், இவர் தற்பொழுது இலங்கை அரசின் சமாதான செயலகத்திற்கு பொறுப்பாளராகவும், இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகராகவும் பதவி வகிக்கிறார்.

அதாவது, ஓர் தேசிய இனத்தின் அரசியல் உரிமைகளை மறுத்து, அவ்வினத்தை கொன்று குவித்த அரசின் பங்காளராக ஜயந்த தனபால உள்ளார். அத்துடன் வேடிக்கை என்னவெனில், இவர் பதவி ஏற்ற காலத்திலிருந்து இன்று வரை, இச்சமாதானச் செயலகத்தினால் சமாதானத்தையோ, பேச்சுவார்த்தையையோ ஒரு அங்குலம் கூட நகர்த்த முடியவில்லை.

மேற்கு நாடுகளில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் யாவும அறிந்த உண்மை என்னவெனில், ஏதாவது ஓர் அரச சார்பற்ற நிறுவனம், இலங்கைத் தீவில் தமிழர்களின் தாயக பூமியான வடக்கு கிழக்கில் இலங்கை அரசினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களை, சர்வதேச அரங்குகளில் எடுத்துக் கூறுவார்களேயானால், உடன் அந்த அரச சார்பற்ற நிறுவனங்கள், இலங்கை அரச பிரதிநிதிகளினால் பல விதங்களில் பயமுறுத்தப்படுவதும் இம்சிக்கப்படுவதும் வழக்கம்.

இந்த ரீதியில் மூன்று ஆண்டுகளுக்கு முன் ஜெனீவாவை தளமாகக் கொண்டு இயங்கும் ஓர் அரச சார்பற்ற நிறுவனம், இலங்கை அரச பிரதிநிதிகளினால் பயமுறுத்தப்பட்டது. இந்த பயமுறுத்தல் நடைபெற்று சில மாதங்களின் பின்னர், தற்போது ஐ.நா. செயலாளர் நாயகப் பதவிக்கு போட்டியிடவுள்ள ஜயந்த தனபால, இந்த அரசசார்பற்ற நிறுவனத்தின் கௌரவ தலைவராக நியமனம் பெற்றார். அன்றிலிருந்து இந்த அரச சார்பற்ற நிறுவனம் வடக்கு கிழக்கின் நிலைமைகள் பற்றி எடுத்துரைப்பதையும் நிறுத்தி விட்டது.

நியூயோர்க்கில் பல முக்கிய புள்ளிகளுக்கு இலங்கையின் இருபது வருடகால யுத்தம் பற்றி கூறும வேளைகளில், இது பயங்கரவாதத்தினால் உருவான போராக இவர்களினால் கூறப்பட்டதுடன், இப்போருக்கு தமிழரே காரணம் எனவும கூறப்பட்டது தற்போது உறுதியாகிறது.



மேற்கூறிய விடயங்களைக் கொண்டு ஊகிக்கக்கூடியது என்னவெனில், இலங்கையில் சமாதானத்தையோ, சமாதானப் பேச்சுவார்த்தையையோ முன்னெடுக்க முடியாத தனபால, உலக சமாதானத்துக்கு உறுதியான ஸ்தாபனமான ஐ.நாவுக்கு செயலாளராக வர முயற்சிக்கின்றார்.

இலங்கையிலேயே மனித உரிமை மீறலுக்கு பரிகாரம் காண முடியாத அரசு, ஐ.நாவையே கௌரவக்குறைவாக நடத்திய அரசு, தனது சுயலாபங்களை மனதில் கொண்டு ஜயந்த தனபாலவை இப் பதவிக்கு போட்டியிட முன் மொழிந்துள்ளது. □

# சுனாமியால் பெற்றோரை இழந்த 26 பிள்ளைகளுக்கு வங்கிப் புத்தகம்

(திருநெல்வேலி)

சுனாமியால் தமது பெற்றோரை இழந்த 26 பிள்ளைகளுக்கு மருதங்கேணி பகுதி நலன் விரும்பிகளால் வங்கிப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் மருதங்கேணி இந்து வித்தியாலய அதிபர் ம.நவநீதமணி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஒவ்வொரு பிள்ளைக்கும் தலா 5000 ரூபா வீதம் தமிழீழ வைப்பகத்தில் வைப்பிலிடப்பட்ட வங்கிப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் கடற்புலிகளின் யாழ். மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் இ.செஞ்சேகரன், நிதித்துறையைச் சேர்ந்த சி.தாயகன் கடற்புலிகளின் வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர் நிலவன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ந-43)

## மேல் மாகாண முதலமைச்சருக்கு

# மத்திய அமைச்சர் பதவி வழங்க ஜனாதிபதி காய் நகர்த்தல்

(கொழும்பு)

சிக்கல் நிலையிலுள்ள மேல் மாகாண சபை முதலமைச்சர் பதவியினை இராஜினாமா செய்வதே சிறந்த வழி என ரெஜினோல்ட் கூரேக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேல்மாகாண சபை முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரேக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை கொண்டுவர முற்பட்டது.

இதனையடுத்து மாகாணசபை அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டன. பின்னர் கூரே மீதான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இந்நிலையில் மேல்மாகாண சபை முதலமைசசர் பதவியினை இராஜினாமா செய்யுமாறு ஜனாதிபதி கூரேக்கு தெரிவித்திருப்பதாக ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள தெரிவித்துள்ளன.

முதலமைச்சர் பதவியிலிருந்து ரெஜினோல்ட் கூரே விலகியதும் அவருக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படவுள்ளது. அதற்காகப் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ பதவி விலகவுள்ளார்.

அந்த இடத்திற்கே ரெஜினோல்ட் கூரே நியமிக்கப்படவுள்ளார் என ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

ரெஜினோல்ட் கூரே பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற பினனா அவருக்கு அமைச்சுப் பதவியொன்றை ஜனாதிபதி வழங்கவுள்ளதாக அவ்வட்டாரங்கள தெரிவித்தன. (அ-4)

# பௌத்தம் கூறும் ஒழுக்கக் கேட்பாடுகள்

**மு.விக்னேஸ்வரன்**

புத்தம், தர்மம், சங்கம் என்ற மூன்று கருபபொருட்கள் பௌத்த ஒழுக்கக் கருத்துகளில் முக்கியத்துவம் பெறுகின்றதைவிட செ நமபுத்தருடைய தர்மசீலங்கள், யோக சாதனைகள், உபாசனைகள், தியானங்கள போன்றவையும் பௌத்த ஒழுக்கத்தை மேலும் மெருகூட்டி நிற்கின்றன.

இன்று இலங்கையில் பௌத்த மதத்தைச் சார்ந்தவர்கள் எனக் கூறப்படுவோர் பௌத்தம் கூறும் ஒழுக்கநெறியைக் கடைபபிடிப்பதற்கு மேலாகச் சங்கத்தைச் சார்ந்தவர்களே இனவாதத் தீயை அணையவிடாது மூட்டிவைப்பவர்களாக யதார்த்தத்தில் செயற பட்டு வந்துள்ளனர். வருகின்றனர்.

கீழைத்தேய ஒழுக்கக் கோட்பாடுகளில் பௌத்த ஒழுக்கம் தனித்துவமிக்கதாக இருநது வந்ததென்பதை மேலைத்தேய ஒழக்கவியலாளர்களும் கூட ஏற்றிருந்தனர். கீழைத்தேய ஒழுக்கவியலாளரான டாக்டர் ராதாகிருஷ்ணன் பௌத்த ஒழுக்கம் அனுபவரீதியானது, பகுத்தறிவுக்குடன்பாடானது, நடைமுறை வாழ்க்கையில் பின்பற்றக்கூடியது என விளக்கியுளளார். இவரைவிட டாக்டர் மகாதேவன், டாக்டர் சிறிநிவாச ஐயர் போன்றோரும் கூட இதுபற்றிய விளக்கங்களைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான அதீத எண்ணக்கருக்களைக் கொண்ட பௌத்த மதத்தைப் பின்பற்றுவோரின் ஒழுக்கக் கோட்பாடுகள் இலங்கையில் மாறுபாடாக அமைவதற்கு மதம் கூறுகின்ற ஒழுக்கக்கருத்துக்களை நெறிப்படுத்துபவர்களின் பேதைமை காரணமாக மனிதன் அறியாமைக்குத் தள்ளப்படுகிறான். இதுவே பௌத்தம் குறிப்பிடும் அபித்தா நிலை எனப்படும்.

## பௌத்த தத்துவங்கள்

பௌத்தம், துன்பம், துன்ப உற்பத்தி, துன்ப நிவாரணம், துன்ப நிவாரணமார்க்கம் ஆகிய நான்கு அடிப்படைத் தத்துவங்களைக் கொண்டது. துன்ப உற்பத்தி தொடக்கம் துன்ப நிவாரண மார்க்கம் வரை பௌத்தம் ஒழுக்கத்தை இறுக்கமாக வலுப்படுத்தியுள்ளது. இவை அனைத்துக்கும் அடிப்படைக் காரணமாக அமைவது அறியாமையேயாகும்.

உலகமும் அதன் இருப்பும் துன்பமயமானது எனப் பௌத்தம் இனங்காண்கிறது. பௌத்தத்தின் நிலையில் துன்ப நிவாரண மார்க்கத்தின் ஊடாக மனிதன் அடையப் போகின்ற மகிழ்ச்சியே உண்மையானது. அந்நிலையே பேரானந்த நிலையாகும். இவ்வகையில் பௌத்தம், பௌத்தர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளது.

I கொல்லாமை II திருடாமை III விபச்சாரம் செய்யாமை IV பொய்யாமை V போதைப் பொருட்களை உட்கொள்ளாமை VI பொன், வெள்ளி போன்றவற்றைத் தீண்டாமை VII இரவில் மிதமிஞ்சி உண்ணாமை VIII அணிகளை விரும்பாமை IX வசதியான உறங்கைகளில் தூங்காமை X களியாட்டங்களில் பங்குகொள்ளாமை.

ஆயினும் சாதாரண மக்கள் முதல் ஐந்தினைக் கடைப்பிடித்தல் போதுமானது. அதேவேளை சங்கத்தார் பத்துச் சீலங்களையும் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது. இந்த ஒழுக்கங்களைப் போன்று பத்து தீவினைகளைப் பற்றியும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது, I பிறர் பொருளை விரும்புதல் II பொய்ச்சாட்சி சொல்லுதல் III கடுங்கோபம் கொள்ளல் IV பொய்பேசுதல் V கடும் சொல் கூறுதல் VI கோள் சொல்லுதல் VII வீணபேச்சு VIII கொலை செய்தல் IX களவு X காமம் என்பனவாகும். பத்துச் சீலங்களையும் பின்பற்றும் சங்கத்தார் பத்துத தீவினைகளும் அணுகாதவாறு வாழ வேணடும். இவ்வாறு வாழ்வதற்குத் துன்ப நிவாரண மார்க்கமே சிறந்தது. எனவே சங்கததார் அரசியலில் ஈடுபடுவதோ சிறு பிரசசினைகளை அரசியல் நடவடிக்கையாக மாற்றுவதோ நல்லதுமல்ல பொருத்தமானதுமல்ல.

## அட்டாங்க மார்க்கம்

பௌத்தம் கூறும் ஒழுக்கக் கோட்பாட்டில் முதன்மையானவற்றில் இதுவும் ஒன்று. நற்காட்சி, நற்செய்கை, நல்வாழ்க்கை, நலலூககம், நன்நெறி, நல்வாய்மை, நல்லுளத்தோர் தலைப்பாடு, நல்லூற்றம் என்பவையே அவையாகும். நல்லுளத்தோர் தலைப்பாடு எனபது மனிதன் பரிநிர்வாண நிலையை அடைவதற்காக உலகின் நிலையாமையை உணர்ந்து சங்கத்தில் சேர்ந்து பரிநிர்வாண நிலைக்குத் தன்னைத் தயார்படுத்திக்கொள்ளும் பிக்குமாரோடு சேர்ந்து வாழல், அவர்களுடைய வாக்கைக் கேட்டு நடத்தல் என்பனவாகும்.

நலலதைக் காண்பதுவும், நல்லவற்றை நினைப்பதுவும் நல்லவற்றைச் செய்யவும், நன்முயற்சிகளிலீடுபடுவதும் பௌத்தம் கூறும் ஒழுக்கமாக அமைவதாலேயே அது எல்லோராலும் பின்பற்றக்கூடிய மார்க்கமாக அமைகின்றது. பௌத்தம் ஒழுக்கத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ள புத்தம், தர்மம், சங்கம் ஆகிய மூன்று கருத்துக்களும் வாழ்வியலை நெறிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

இவற்றை நெறிப்படுத்தும் தார்மீக பொறுபபையும் அதிகாரத்தையுமுடையவர்கள சங்கத்தினரே. சங்கத்தினரை நெறிப்படுத்தும் அதிகாரமுடையவர்கள் மகா சங்கத்தினர். இவர்கள் செய்யும் தவறுகளை நெறிப்படுத்துபவை நீதி மன்றங்கள் என்றும் அவர்களுக்கு கட்டுப்படாது அப்பாவி சிங்கள மக்களையும் அரசியல்வாதிகளையும் இரகசியமாகத் தூண்டிவிடும் செயற்பாட்டிலீடுபடும் நடவடிக்கையில் சங்கத்தினர் ஈடுபாடு கொண்டுள்ளமை யாவரும் அறிந்த ஒன்றாகும். இது காரணமாகவே எமது நாட்டில் துன்ப நிவாரணம் தொடர்ந்தும் வியாபித்து செல்கின்றது.

இவர்களின் இச்செயற்பாட்டினால் கௌரவத்துக்கும் மதிப்பிற்குமுரிய புத்தபிரான் சிலை கருவாட்டுக் கடைப் பகுதியிலும் மீன் சந்தைப் பகுதியிலும் திடீர் திடீரெனத் தோன்றி பலத்த எதிர்ப்பையும் சர்ச்சையையும் பல தரப்பினர்களிடையேயும் தோற்றுவித்து இராணுவத்தினரதும் பொலிஸாரினதும் பாதுகாபபிலிருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

பௌத்தத்தைப் போதித்த புத்தபிரான் தனது சிலைகளை சர்ச்சைகளை உருவாகும் வகையில் நிறுவுமாறு எவ்விடத்திலும் கூறியதாகச் சான்றுகள் இல்லை. பௌத்தத்தைப் போதித்த புத்தரின் சீலங்களைப் பின்பற்ற மகாசங்கத்தினர் முன்வரவேண்டும்.

# கடும் எச்சரிக்கை!

(திருநெல்வேலி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் கலாசார சீரழிவு நடவடிக்கையில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என இப்பகுதி கலாசாரம் பேணும் குழுவினா எச்சரித்துள்ளனர்.

இப்பகுதிகளில் எச்சரிக்கை சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன.

அத்துடன் யாழ்.குடாநாட்டில் ஆபாசப் படங்கள் பார்ப்போர் மற்றும் அவற்றை எடுத்து வருவோர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என கலாசாரம் பேணும் குழுவினர் எச்சரித்துள்ளனர். (ந-43)

# கடமை நேரத்தில் தனிப்பட்ட சேவை

(கொழும்பு)

கடமை நேரத்தில் தனிப்பட்ட சேவையில் ஈடுபடும் சுகாதாரத்துறை ஊழியர்கள் குறித்து சுகாதார அமைச்சு உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

கடந்த சில நாட்களில் அமைச்சின் விசாரணைப்பிரிவு மேற்கொண்ட நடவடிக்கையின் போது மூன்று மருத்துவர்கள் கடமை நேரத்தில் தனிப்பட்ட சேவையில் ஈடுபட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (அ-9)

# பொதுக் கட்டமைப்புக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு ஏற்பாடுகள் நடைபெறுவதாக செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

புலிகள் இயக்கத்திற்கு சட்டரீதியான அங்கீகாரத்தை வழங்கும் உத்தேச பொதுக் கட்டமைப்பை செயற்படுத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தால் அதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முன்னணி சிங்கள சிவில் அமைப்புகளும், சட்டத்தரணிகள் பலரும் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி தமது உயிரைப் பணயம் வைத்தாவது பொதுக்கட்டமைப்பை ஏற்படுத தப்போவதாக அடிக்கடி கூறிவருவதால் தாய் நாட்டின் ஒருமைப்பாடு, இறைமை என்பவற்றை முன்னிட்டு சில சிங்கள இனவாத அமைப்புக்கள் சட்ட நடவடிக்கைகளுக்கு தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு இடைக்காலத்தடை விதிக்கக்கோரி இந்த வழக்குகள் எதிர்வரும் வாரங்களில் தாக்கல் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ-4)

# சிசுசவிய புலமைப்பரிசில் திட்டம் நீடிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

அரசாங்க பாடசாலைகளில் கல்வி பயிலும் வறிய மாணவர்கள் அவர்களது கல்வி நடவடிக்கைகளைத் தொடர வழங்கப்பட்டுவரும் சிசுசவிய புலமைப்பரிசில் திட்டம் 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டிமெல் தெரிவித்துள்ளார்.

இடைநிலைக் கல்வியை நவீன நிலைபபடுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் அமுல்செய்யப்படடு வரும் சிசுசவிய புலமைப்பரிசில் திட்டம் இந்த வருடத்துடன் முடிவடைய இருந்தது.

தற்போது இந்தத் திட்டத்தன் இரண்டாம் கட்டம் இம்மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் கொடுப்பனவும் தொடர்ந்து வழங்கப்படவுள்ளது.

சிசுசவிய புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ அரசாங்கப் பாடசாலைகளில் 10 ஆம் வகுப்பு தொடக்கம் 13 ஆம் வகுப்பு வரை வருடாந்தம் 24 ஆயிரம் ரூபாவிற்கு குறைவான வருமானத்தைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாண வர்களுக்கு ஒவ்வொரு வருடமும் 5 ஆயிரம் ரூபா புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

இதன்மூலம் ஆண்டுதோறும் 12 ஆயிரம் வறிய மாணவர்கள் புலமைப்பரிசில் நிதியைப் பெற்று வருகின்றார்கள் என அமைசசர் மேலும் தெரிவித்தார். (அ-9)

# தமிழில் செயலாற்ற முடியாமை மனித உரிமைமீறலாகும்

(கொழும்பு)

தமிழ்மொழி அரச கருமமொழியாக 1989ஆம் ஆண்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள போதும் அரச அலுவலகங்கள், பொலிஸ்நிலையங்கள், நீதிமன்றங்கள் போன்றவற்றில் தமிழ் மொழியில் கருமங்களை செய்யமுடியாதுள்ளதாகவும் இது மனிதவுரிமைகளை மீறும் செயல் எனவும் அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று அரச கரும மொழித்திணைக்களத்தினால் ஏற்பாடு செயயப்பட்ட அரசமொழிகளுக்கான செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மத்திய ஊவா மாகாணங்களில் தமிழர்கள் அதிகமாக வாழ்ந்துவருகின்றனர். இநதப் பிரதேசங்களில் உள்ள அலுவலகங்களில் தமிழர்கள் தமது தாய்மொழியில் கருமங்களை மேற்கொள்ளக்கூடிய வகையில் தமிழ் உத்தியோகத்தர்களையும் மொழி பெயர்ப்பாளர்களையும் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-8)

# நிவாரணம் ஒழுங்கில்லை பலப்பிட்டியவில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஆழிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசினால் வழங்கப்பட்டு வரும் 5000ரூபா கொடுப்பனவு இரண்டுமுறை மாத்திரம்தான் வழங்கபபட்டுள்ளதாகத் தெரிவிதது பலப்பிட்டியவில் பாதிக்கப்பட்ட மக்கள் நேற்று ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தியுள்ளனர்.

பலப்பிட்டிய பிரதேச செயலகத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்டு வாழ்விடங்களை இழந்த எமக்கு அரசின் நிவாரண உதவிகள் உரியமுறையில் வழங்கப்படவில்லையெனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

நிரந்தர தொழிலைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு எதிர்காலத்தில் 5000 ரூபா கொடுபபனவை வழங்காது இருப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தினால் தாம் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும், இது குறித்து அதிகாரிகளுக்கு பலமுறை அறிவிககப்பட்டுள்ளபோதும் உரிய பலன் கிடைக்கவில்லையென்றும் தெரிவித்தனர். (அ-8)

# சோதனை கெடுபிடிகளை தவிர்க்குமாறு கோரிக்கை

(திருநெல்வேலி)

க.பொ.த உயர்தர பரீட்சைக் காலங்களில் உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள பாடசாலைகளுக்கு மாணவர்கள் பரீட்சைக்கு செல்லும்போது படையினர் அவர்களை எத்தகைய சோதனைக் கெடுபிடிகளிற்கும் உள்ளாக்கக்கூடாது என குடாநாட்டு கல்விமான்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாடசாலைகளுக்குள் படையினர் முகாம் அமைத்துள்ளதால் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் பரீட்சைக் காலத்திலும் உளரீதியான பாதிப்பிற்கு உள்ளாக வாய்ப்பு உள்ளது எனவும் இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ந-43)

# ஓவியக்கண்காட்சி நாள் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவிருந்த ஓவியர் புகழேந்தியின் "புயலின் நிறங்கள்" ஓவியக் கண்காட்சியும் கருத்துப் பகிர்வும் நிகழ்வு இன்று இடம்பெறாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்களின் திடீர் மறைவினையடுத்து அவரது இறுதி நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளதால் இன்று ஆரம்பமாகவிருந்த கண்காட்சி நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமையும் மறுதினமும் நடைபெறுமென சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அறிவித்துள்ளது. (ந)

# 2015 ற்குள் 200 கோடி மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர்; சுகாதாரம்

## ஐ.நா அமைப்பு உறுதி

(ஜெனீவா)

2015ஆம் ஆண்டுக்குள் உலகில் 200 கோடி மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரும, அடிப்படை சுகாதார வசதிகளும் கிடைபபது உறுதி செய்யப்படும என்றுஐ.நா அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜெனீவாவில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் மற்றும் உலக சுகாதார நிறுவனம் ஆகியவை இதை உறுதி செய்தன.

உலகச் சுற்றுச்சூழல் தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. இதையொட்டி இந்த இரு அமைப்புகளும் கூட்டாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

பாதுகாப்பான குடிநீர் மறறும் கழிப்பிட வசதிக்கு ஆண்டுதோறும் ரூ.1,130 கோடி செலவிட வேண்டும்.

இந்தக் குறைந்தபட்ச நிதி ஒதுக்கீடு மூலம் மனித இறப்புகள் மற்றும் நோய் வாய்ப்படுவதை வெகுவாகக் குறைக்க முடியும். மேலும் பொருளாதாரமும் வலுப்படும.

உலகில் உள்ள ஏழை நாடுகளில் மோசமான குடிநீர், சுகாதார வசதியின்மை ஆகிய காரணங்களால் ஆண்டுதோறும் 19 இலட்சம் குழந்தைகள் இறக்கின்றனர்.

இதில் வாந்தி,பேதி போன்ற நோய்களால் மட்டும் ஆண்டுதோறும் 3 இலட்சம் குழந்தைகள் இறககின்றனர். குறிப்பாக தெறகாசியா மற்றும் ஆபிரிக்காவின் சஹாரா பகுதிகளில் இந்த இறப்புச் சம்பவங்கள அதிகம் நிகழ்கின்றன.

தெற்காசியாவில் ஆண்டுதோறும் கூடுதலாக 4.2 கோடி மக்களுக்கு சுகாதார வசதி அளிப்பதன் மூலம் 2015இல் இலக்கை எட்டமுடியும் என்று அந்த அறிக்கையில மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# இந்திய - அமெ. இடையிலான இராணுவ உறவு வலுவடையும்

## -டொனால்ட் ரம்ஸ்பெல்ட்

(வோஷிங்டன்)

ஆசியக் கண்டத்தில் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் ஒன்றான இந்தியாவுடன் இராணுவ உறவுகள் எதிர்காலத்தில் மேலும வலுவடையும் என்று அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்நாட்டுப் பாதுகாப்புத்துறை அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பெல்ட் கூறியதாவது,

இந்தியா எந்த இலக்கை நோக்கி முன்னேறிச் சென்றுகொண்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே, இனி வரும் காலங்களில், இந்தியாவுடனான [illegible]வுகள் தொடர்ந்து வலுப்பெற்றுவரும் என நம்புகிறோம்.

ஆனால், சீனாவைப் பொறுத்தவரை, எந்த இலக்கை நோக்கி அந்நாடு சென்றுகொண்டு இருக்கிறது என்பது அவ்வளவு தெளிவாக இல்லை.

ஏனென்றால் அந்நாடு கடைப்பிடித்து வரும் பொருளாதாரக் கொள்கைகளுக்கும் அரசியல் முறைகளும் இடையே பாரிய முரண்பாடு காணப்படுகிறது என்று கூறினார் ரம்ஸ்பெல்ட். (ற)

# மீண்டும் ஆயுதங்களை விற்க போபர்ஸ் நிறுவனம் முயற்சி

(கார்ல்ஸ்கோகா)

ஆயுதப் பேர ஊழல் வழக்கில் விடுவிக்கப்பட்டதால் இந்தியாவுக்கு மீண்டும் ஆயுதங்களை விற்க போபர்ஸ் நிறுவனம் முயற்சி மேற்கொண்டுள்ளது.

போபர்ஸ் நிறுவனம் ஆயுத பேரத்தில் ஈடுபட்டதாக டில்லி ஐகோர்ட்டில் வழக்கு நடந்தது. சுவீடன் நாட்டைச் சேர்ந்த இந்நிறுவனத்தின் நற்பெயருக்கு இதனால் களங்கம ஏற்பட்டது. இவ்வழக்கில் சமீபத்தில் தீர்ப்பு வழங்கிய டில்லி ஐகோாட், போபர்ஸ் நிறுவனம் நடத்திய ஆயுத பேரத்தில் ஊழல நடக்கவில்லை எனத் தீர்ப்பு வழங்கியது.

சுவீடன் நாட்டின் பல பத்திரிகைகளில் இது தலைப்பு செய்தியாக இடம்பிடித்தது.

போபர்ஸ் விவகாரம் இழுபறியில் இருந்த போதும கார்கில் போரில் போபர்ஸ் பீரங்கிகள் இந்திய வெற்றிக்கு மிகவும் உதவியாக இருந்தன. அத்துடன் இராணுவத்திற்குத் தேவையான வேறு சில ஆயுதங்களையும் போபர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. ஆயுத பேர விவகாரத்திலிருந்து விடுபட்டதால் இந்தியாவுககு மீண்டும் ஆயுத சப்ளை செய்ய போபர்ஸ் நிறுவனம் திட்டமிட்டு வருகிறது. (ற)

# தற்கொலைப் படைத் தாக்குதல்; சுபி முஸ்லிம்கள் 10 பேர் பலி

(பக்தாத்)

ஈராக்கில் சுபி முஸ்லிம்கள் பிரார்த்தனைக்காகக் கூடியிருந்த இடத்தில் நடந்த தற்கொலைப்படை தாக்குதலில் 10 போ பலியாகியுள்ளனர்.

ஈராக்கில் பெருமபான்மை ஷியா முஸ்லிம்களுககும் சிறுபான்மை சன்னி முஸ்லிம்களுக்கும் இடையில் அடிக்கடி மோதல ஏற்பட்டு வருகிறது. சதாம் உசேன் ஆட்சிக காலத்தில் இருந்தே இந்தப் போராட்டம் தொடர்கிறது. இதில், சுபி என்ற மிகச் சிறுபானமை முஸ்லிம்களும் இங்கு வசிதது வருகின்றனர். சதாம் உசேன் சிறுபான்மை சன்னி முஸலிம் பிரிவைச் சேர்ந்தவர். சதாம் உசேனின் ஆட்சிக் காலத்தில் பெரும்பான்மை ஷியா முஸ்லிம்கள் மிகவும் பாதிக்கப்படடனர். இதனால், சதாமின் ஆட்சியை அவர்கள் வெறுத்தனர்.

இந்தநேரத்தில் சதாமின் ஆட்சி ஈராக்கில அகற்றப்பட்டது. ஷியா முஸ்லிம்கள் மிகவும மகிழ்ச்சி அடைந்தனர். சன்னி முஸ்லிம்களுக்கும் ஷியா முஸ்லிம்களுக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் நடந்து வந்தன. மிகவும் சிறுபான்மை பிரிவைச் சேர்ந்த சுபி முஸ்லிம்கள் தியானத்தின் மூலம் கடவுளை அடை முடியும் என்ற கொள்கையை உடையவர்கள். இந்தக் கொள்கையை மற்ற முஸ்லிம் பிரிவினர் கடுமையாக எதிர்த்து வருகின்றனர்.

கடந்த இரு தினங்களுக்கு முன் வடக்கு பக்தாத்தில் சுபி முஸ்லிம்கள் பங்கேற்ற ஒரு பிரார்த்தனை நிகழ்ச்சி நடந்தது. அப்போது தற்கொலைப்படையைச் சேர்ந்த ஒருவர் சகதிவாய்ந்த வெடிகுண்டுகளுடன் சுபி முஸ்லிம்கள் கூட்டத்தில் புகுந்து வெடிகுண்டை வெடிக்கச் செய்தார். இதில், சம்பவ இடத்தில் 10க்கும் மேறபட்டவர்கள் உயிரிழந்தனர். 12க்கும் மேறபட்டவர்கள படுகாயமடைந்தனர். மிகவும் சிறுபான்மை இனமான சுபி முஸ்லிம்கள மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இதுதான் மிகப்பெரிய தாக்குதல் என்று ஈராக் உள்துறை அதிகாரிகள் கூறினர்.

சதாம் உசேனின் சொந்த நகரான திக்ாித்தில் கடந்த வெள்ளக்கிழமை கார் வெடிகுண்டு வெடித்ததில் ஈராக் இராணுவ வீராகள் ஐந்து பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

# குழந்தைக்கு மறு வாழ்வளித்த பன்றித்தோல்

(பீஜிங்)

வெந்நீர் பானையல் விழுந்து தோல் உரிந்துவிட்ட குழந்தைக்கு பன்றியின் தோல் மூலம் மறுவாழ்வு அளித்துள்ளனர் சீன டாக்டர்கள்.

சீனாவின் சசான் மாகாணம் செங்டு நகரக் குடும்பத்தைச் சேர்ந்தது அக் குழந்தை பெயர் டாங்ஜின் (15மாதம்). கடந்த மாதம் 12ஆம் திகதி வீட்டில் கொதிக்கும நீர் பானையில் அக் குழந்தை விழுந்து விட்டது. குழந்தையின் ஆடைகளை அகற்றும் போது தோலும் சேர்ந்து உரிந்து வந்து விட்டது.

குழந்தைக்கு செங்டு ரயிலவே மருத்துவமனையில் 19 நாடகள் சிகிச்சை அளிக்கப்பட்டது. குழந்தை தேறி வந்தது. அதன் பின, சிகிச்சை அளிக்கப் பெற்றோருக்கு நிதி வசதி இல்லை. இதுகுறித்து உள்ளூர் பத்திரிகைகளில் செய்தி வெளியானது.

தோல் அறுவைச் சிகிச்சை நிபுணர் வபிங் குழந்தைக்கு உதவ முன்வந்தார். சர்வதேச குழந்தைகள் தினமான கடந்த புதன் கிழமை 4 மணி நேரம் அறுவை சிகிச்சை நடந்தது. பன்றியின் தோலைப் பயன்படுத்து குழந்தை காப்பாற்றப்பட்டது.

குழந்தையின் உடல்நிலை நல்ல நிலையில் இருக்கிறது. இரு மாதங்களில் அக் குழந்தை வீடு திரும்பலாம் என்று மருத்துவமனை வட்டாரங்கள் கூறின. சர்வதேச குழநதைகள் தினத்தையொட்டி இந்த அறுவைச் சிகிச்சைக்கு அந்த மருததுவமனை பணம் வாங்கிக் கொள்ளவில்லை.

முன்னதாக பன்றித் தோலுக்காக அறிவிப்பு வெளியிடப்பட்டபோது 100 பேர் தஙகளது பன்றிகளைக் கொண்டுவந்து தரத் தயாராக இருப்பதாக தகவல் அனுப்பியமை குறிப்பிடத்தக்கது. (ற)

# நர்மதை ஆற்றில் படகு கவிழ்ந்தது 7 பேர் பலி; 6 பேரைக் காணவில்லை

(வதோதரா)

குஜராத் மாநிலம் வதோதரா மாவட்டத்தில் நர்மதை ஆற்றைக் கடக்கும்போது ஒரு படகு நீரில் மூழ்கியது. இதல் 7 பேர் பரிதாபமாகப் பலியானார்கள்.

குஜராத் மாநிலம், வதோதரா மாவட்டத்தில் வராச்சா என்ற இடத்திலிருந்து காயாவனம் என்ற இடத்திற்கு ஒரு படகில் திருமண கோஷ்டியினர் சுமார் 30 பேர் சென்று கொண்டிருந்தனர். அப்போது நர்மதை ஆற்றில் அந்தப் படகு திடீரெனக் கவிழ்ந்து மூழ்கியது.

இந்தப் படகில் பயணம் செய்த 7 பேர் ஆற்றில் மூழ்கி இறந்தனர். பொலிஸார் மற்றும் தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து ஆற்றில் தத்தளித்துக்கொண்டிருந்த 15பேரை உயிருடன் மீட்டனர். பலியான 7 பேரின் சடலங்களும் மீட்கப்பட்டன.

இவர்களில் மூனறு பேர் குழந்தைகள். 6 பேரைக் காணவில்லை. அவர்களைத் தேடும் பணியும் நடைபெற்று வருகிறது.

படகின் அடிப்பகுதியில் இருந்த மரப் பலகை உடைந்து போனதால் ஆற்றுநீர் படகிற்குள் வந்தது என்றும், அதனால் படகு மூழ்கி இந்தத் துயரச் சம்பவம் ஏற்பட்டது என்றும் அதிகாரிகள் கூறினர். (ற)

# பெனாசீரின் கணவருக்கு திடீர் மாரடைப்பு

(துபாய்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் இப்போது வெளிநாட்டில் தங்கியிருககிறார். பாகிஸ்தான் மக்கள் காட்சித் தலைவியாக இருக்கும் பெனாசருக்கு ஊழல் வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அவர் பாகிஸ்தான் திரும்பினால் அவரைப் பாகிஸ்தான் அரசு கைது செய்யத் தயாராக இருக்கிறது.

இந்த நிலையில் பெனாசீர் கணவர் ஆசிப் - அலி சர்தாரி ஊழல் வழக்கில சிறைத் தண்டனை அனுபவித்து ஒரு சில ஆண்டுகளுக்கு முன்புதான் விடுதலை ஆனார்.

சமீபத்தில் ஆசிப் - அலி சார்தாரி துபாய் சென்றார். அங்கு தங்கியிருந்த போது சர்தாரிக்கு திடீர் மாரடைப்பு ஏற்பட்டது. முதுகுவலியாலும் அவர் கடுமையாகப் பாதிக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து அவர் துபாயில் உள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.



அவரது இருதயத்துக்குச் செல்லும் இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டு இருபபது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அவரது உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது. டாக்டர்கள் அவருக்கு தீவிர சிகிச்சை அளித்து வருகிறார்கள். கணவரைப் பார்க்க பெனாசர் விரைந்துள்ளார். (ற)

# மீண்டும் குமுறுகிறது பாரன்தீவு எரிமலை

(போர்ட்)

அந்தமான் - நிக்கோபாரில் உள்ள பாரன் தீவில் இருக்கும் எரிமலை மீண்டும் குமுறுகிறது.

எரிமலை உச்சியிலிருந்து பெரும் புகைப் படலம் கிளம்பியுள்ளது. இந்தியாவின் ஒரே செயல்படும் எரிமலையான இது அந்தமான் -நிக்கோபாரின் தலைநகர் போர்ட் பிளையரிலிருந்து 135 கீலோமீற்றர் தொலைவில் உள்ளது.

இந்திய கடலோரக் காவற்படையின் டோர்னியர் ரோந்து விமானம் வழக்கமான ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது கடந்த வெள்ளிக்கிழமை காலையில் எரிமலை சீறுவதைக் கண்டறிந்து தெரிவித்தது. எரிமலையின் வாயிலிருந்து அடர்த்தியான புகை உயரத்தில் எழுந்துள்ளது. எரிமலைக் குழம்பு வடிந்தவண்ணம் உள்ளது. கொதிநீரும் பீய்ச்சியபடி உள்ளது.

பருவமழை கடந்த சில தினங்களாக அந்தப் பகுதியில் பெய்தது. அதனைத் தொடர்ந்து எரிமலை குமுறத் துவங்கியதாகக கடலோரக் காவற்படை டி.ஐ.ஜி எஸ.பி.எஸ பாஸ்ரா தெரிவித்தார்.

எரிமலை வாயிலிருந்து எரிமலைக் குழம்பு சீறிப்பாய்ந்து கொண்டு வருகிறது. கற்களும் உருகிய நிலையில் வெளியே தள்ளப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

கடலோரக் காவற்படையினர் அந்த எரிமலையின் செயல்பாட்டை விமானம் மூலம் தொடர்ந்தும் கண்காணித்து வருகிறார்கள். 10 ஆண்டு காலமாக தூங்கிக் கொணடிருந்த அந்த எரிமலை மே 28ஆம் திகதி முதல் செயல்படத்தொடங்கியமை குறிப்பிடத்தக்கது. (ற)

# கடலியல் சார்ந்த துறைகளில் தீவிரவாத இயக்கங்கள் பயிற்சி

## எச்சரிக்கிறார் சிங்கப்பூர் பிரதமர்

தென்கிழக்காசியாவிலுள்ள தீவிரவாத இயக்கங்கள் கடலியல் சார்ந்த துறைகளில் பயிற்சி எடுத்துவருவதாகச் சிங்கப்பூர் பிரதமர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக தீவிரவாத இயக்கங்கள மலாக்கா நீரிணைப்பகுதியில் இந் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது குறித்து தங்களுக்கு உறுதியான தகவல்கள் கிடைத்துள்ளதாகத் தெற்காசிய வட்டாரத் தற்காப்பு அமைச்சர்கள் அளவிலான மாநாட்டைத் தொடக்கி வைத்து உரையாறறுகையில் அவர் கூறினார்.

ஆண்டுக்கு 50 ஆயிரம் கப்பல்கள் மலாக்கா நீரிணையைக் கடந்து செல்கினறன. அதில் அதிக அளவில் செல்லும் எண்ணெய்க் கப்பல்கள் மீது தீவிரவாத இயககங்கள் தாக்குதல் தொடுக்கலாம் எனவும் அவர் அச்சம் தெரிவித்தார்.

இதனிடையே மலாக்கா நீரிணை வட்டாரத்தில் தங்கள் கட்டுப்பாட்டில் வரும் பகுதிகளில் தாங்களே பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாக மலேசியாவும், இந்தோனேசியாவும் தெரிவித்துள்ளன. (ற)

பருவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது - குறள்

வலம்புரி

# இலங்கையின் சதிக்குள் இந்தியா விழலாகாது!

இலங்கை -இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்வதில் இலங்கை அரசு முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

இந்தியாவின் படைபலத்தை பயன்புடுத்தி இலங்கையில் பௌத்த சிங்கள ஆட்சியை நிலைநிறுத்துவதே ஜனாதிபதி சந்திரிகா குமார துங்காவின் இலக்கு.

இந்தியாவின் உதவியுடன் ஈழத்தமிழர்களை அழிக்கும் முயற்சியில் இலங்கை அரசுகள் காலத்திற்கு காலம் சதித்திட்டங்களை தீட்டி வந்துள்ளமை உலகறிந்த உண்மை.

1983 யூலையில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது ஈழத்தமிழர்கள் சிங்கள ஆட்சியாளர்க ளால் கொல்லப்பட்டனர். தமிழ்மக்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டு அவர்கள் வெட்டிக்கொலைசெய்யப்பட்டபோது, அன்று ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா வெறும்பார்வையாளராக இருந்தார்.

அந்த நேரத்தில் இந்தியாவின் பிரதமராக இந்திராகாந்தி இருந்தார். ஈழத்தமிழர்கள் கொல்லப்படும் செய்திஅறிந்து தமிழக உடன் பிறப்புகள் கொதித்து எழுந்தனர்.

தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப் பளித்தும், அண்டைநாடு என்ற முறையிலும் இந்திராகாந்தி தனது அரசில் வெளியுறவு அமைச்சராக இருந்த நரசிம்மராவ் அவர்களை இலங்கைக்கு அனுப்பி வைத்தார்.

அத்தோடு தென்னிலங்கையில் ஏதிலிகளாக் கப்பட்ட தமிழ்மக்களை வடக்கு கிழக்கு மாகா ணங்களுக்கு அனுப்பிவைப்பதற்காக 'சிதம்பரம்'கப்பலையும் அனுப்பிவைத்தார்.

இந்நடவடிக்கைகள் இலங்கை ஆட்சியாளர் களுக்கு பெரும் ஆத்திரத்தை ஊட்டியது. ஈழத் தமிழர்களுக்கு இந்தியா இருக்கிறது. ஆனால் நமக்கு உதவ யார் உள்ளர்? என்ற கேள்வி களை பேரினவாதிகள் எழுப்பினர்.

ஜே.ஆரின் ஆட்சிக்காலத்தில் பிரதமராக இருந்த ஆர்.பிரேமதாசா இந்தியாவை கடுமை யாக விமர்சித்தார். எனினும் ஜே.ஆர்.ஜெயவர்த் தனா இந்தியாவுடன் சேர்ந்து சென்று இந் தியாவைக்கொண்டே தமிழர்களுக்கு பாடம் புகட்டவேண்டுமென திட்டமிட்டார். அவரின் திட்டம் இந்திய அமைதிப்படையின் ஊடாக அரங்கேறியது.

ஈழத்தமிழர்களுக்கு உதவதற்காக இலங் கைக்கு வந்த இந்திய அமைதிப்படை தமிழர் களைக் கொன்றொழித்தது. இலங்கை இரா ணுவத்தால் பாதிக்கப்பட் தமிழ்மக்களுக்கு இந்திய அமைதிப்படை உதவும் என்றால் அது வும் அழிவே செய்தது.

ஜே.ஆரின் நரித்தந்திரம் ராஜீவ்காந்தி என்ற அரசியல் அனுபவம் அற்ற இந்தியத்தலைவர் ஊடாக நிறைவேறியது. ஜே.ஆரின் நரித்தந் திரத்திற்குள் அகப்பட்ட ராஜீவ் காந்தியால் ஈழத் தமிழர்களுக்கும் தமிழகத்து உடன்பிறப்புகளுக் கும் இடையிலான உறவில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

இவை நடந்தவற்றின் நினைவுகள். ஆனால் அந்த நினைவுகள் மீண்டும் நிஜங்களாக மாறிவிடுமோ என்ற ஏக்கம் ஈழத்தமிழர்களிடையே ஏற்பட்டுள்ளது. ஜே.ஆரின் பாதையில் ஜனா திபதி சந்திரிகா குமாரதுங்கவும் தனது பய ணத்தை ஆரம்பித்துள்ளார்.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகளை நசுக் குவது அவரின் திட்டம். யுத்தநிறுத்த உடன் பாடு நடைமுறையில் இருக்கும்போது இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்செய்ய வேண்டியதேவை என்ன? ஆக, மீண்டும் இந்தியாவைக் கொண்டு ஈழத்தமிழர்களை நசுக்கும் மற்றுமோர் சதித்திட்டத்தை இலங்கை தயாரித்துள்ளது.

இந்த சதித்திட்டத்திற்குள் வீழ்ந்து விடாமல் இந்தியா தப்பித்துக்கொள்வது கடந்த காலத் தவறுகள் மீண்டும் ஏற்படாது இருப்பதற்கான வழியாகும்.

# சந்திரிகா - மிலிந்த சந்திப்பு ஐ.தே.கட்சிக்குள் சலசலப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க; அமெரிக்க முன்னாள் அதிபர் பில்கிளினடன் ஆகியோருடன் பிற்பகல் விருந்தில் முன் னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட கலந்துகொண்டது இப்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த விருந்திற்கு விடுத்திருந்த அழைப்பை ஐக்கிய தேசியக் கட்சி நிராகரிக்க முடிவு செய்தது. ஆனால் இதை ஏற்காமல் மிலிந்த மொற கொட விருந்தில் கலந்துகொண்டது அவரது கட்சியின் சகாக் களிடம் கடும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கட்சியின் செயல்திட்டப் படி நடக்காமல் அவரது சொந்த விருப்பிலே யே மிலிந்த செயல்படுவதாக அவர்கள் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முறையிட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, துணைத் தலைவர் கருஜெயசூர்ய ஆகியோர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அழைப்பை நிராகரித்திருந்தனர். இந்த விருந்தில் பங்கேற்காத ரணில் விக்கிரமசிங்க கொழும் பிலும அன்று இருக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தல் தொடர் பான பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக அவர் சென்று விடடார்.

மொறகொட மற்றும் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ ஆகியோர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் இருக்கிற புகைப்படங்கள் அனை வரையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது.

இந்த வீருந்திற்கு முன்னதாக ஜனாதிபதி சந்திரிகா மிலிநத மொறகொடவைத் தொடர்பு கொண்டதாகவும் சிறையில் இருக்கும் எஸ்.பி திஸநாயக்கா விடயம் தொடர்பாக ஆலோ சனை நடத்த வருமாறு ஜனாதிபதி சந்திரிகா அழைத்ததா கவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் மொறகொட தரப்பு இதை மறுத்துள்ளது.

அதே நேரத்தில் இந்த விருந்தில் பங்கேற்பதற்காகவே தனது துருக்கிப் பயணத்தை மிலிந்த மொறகொட மாற்றி அமைத்ததாக மொறகொட தரப்பினர் தெரிவித்தனர்.

மலிந்த மொறகொடவின் இந்த சந்திப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்குள் சலசலப்பை உருவாக்கி இருக்கிறது. இது எத்த கைய சிக்கலாக அக்கட்சிக்குள் வெடிக்கும் என்பது இனி மேலதான் தெரிய வரும் என ஐக்கிய தேசியக் கட்சியினா விசனம தெரிவித்தனர். (அ-4)

# பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால் எதிராகப் போராட ஜே.வி.பி தீர்மானம்

(கொழும்பு)

யார் ஆதரித்தாலும், யார் எதித்தாலும் ஜே.வி.பி பொதுக் கட்டமைப்பை ஆதரிக்கமாட்டாது என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்துளளார்.

நேற்று ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியி லேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பில் அரசாங்கம் கையெழுத்திட்டால் ஜே.வி.பி அரசை விட்டு வெளியேறும். அது உறுதி.ஆனால் அரசை விட்டு வெளியேறும் நாம் அரசுக்கு எதிராகப் போராட் டங்களை நடாத்தத் தீர்மானித்துள்ளோம்.

அது ஒவ்வொரு கட்டமாக நடைபெற ஏற்பாடுகளை மேற் கொண்டுள்ளோம் எனத் தெரிவித்தார்.

இந்தியா தற்போது தெரிவித்திருப்பது உறுதியான முடிவு அல்ல. ஜனாதிபதி சந்திரிகாவின் முகம் க்றுக்கக் கூடாது என்பதற்காகவும் அங்குள்ள தமிழ்க் கட்சிகளை மனங் குளிரச் செய்வதற்காகவுமே இந்தியா இதனை அறிவித் துள்ளது.

உண்மையில் இந்திய அரசுக்கு இலங்கையரசு விடுதலைப புலிகளுடன் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட ஒருபோதும் இணக்கமில்லை என்றும் ஆட்சியினைத் தக்க வைப்பதற் காகவே மன்மோகன்சிங் தலைமையிலான அரசு இதனைத் தெரிவித்துள்ளது எனத் தெரிவித்தார்.

இந்த நிலையில் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டு விடுதலைப் புலிகளுக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அதிகாரத்தைக் கொடுக்க ஜனாதிபதிக்கு என்ன தேவையுள் ளது என அவர் கேள்வி எழுப்பினார். (அ-4)

## புத்தர் சிலை விவகாரம்

# தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தீர்மானம்

(கொழும்பு)

திருகோணமலையில் திடீரென நிர்மாணிக்கப்பட்ட புத்தர் சிலை விவகாரத்தை நாடாளுமன்றத்திற்குக் கொண்டு செல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

நாளை ஆரம்பமாகவிருக்கும் நாடாளுமன்ற அமர்வில் இந்த விவகாரம் குறித்து ஆராயப்படுமென்றும் அதற்கு நீதியான பதில் கிடைக்காது விடின் அங்கேயே போராட்டம் நடத்தவும தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள தீர்மானித்துள்ளார்கள்.

கடந்தவாரம் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதினாறு பேர் திருகோணமலைக்குச் சென்று அங்குள்ள நிலை மைகளை ஆராய்ந்துள்ளனர். அங்கு நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து செல்வதாகவும் 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் குவிக்கப்பட்டு அங்கங்கே கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர்கள் தெரி வித்தனர்.

திருகோணமலை புத்தர்சிலை விவகாரத்தையடுத்து அங்கு மேலதிகமாக இராணுவத்தினர் குவிக்கப்படுவதும் திடீரெனப் புத்தர்சிலை நிர்மாணிக்கப்பட்டிருப்பதும் பல்வேறு சந்தேகங் களைத் தோற்றுவிப்பதாகவும் இதுகுறித்து சாத்வீக ரீதியில் போராட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர்கள் தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

அவர்கள் தமது இந்தப் போராட்டத்தை நாடாளுமன்றம் ஆரம்பமாகும் போது நாடாளுமன்ற வளாகத்தில் தொடங்கி தீர்வு கிடைக்கும் வரை தொடர்ச்சியாக முன்னெடுக்க இருப்ப தாகவும் தெரியவருகிறது. (அ-5)

## தனியார் பாடசாலைகளில்

# ஆசிரியர் நியமனங்களுக்கு அரச அனுமதி வேண்டும்

(கொழும்பு)

அரசாங்க உதவி பெறும் தனியார் பாட சாலைகளுக் கும், அவற்றில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குமான ஸ்தாப னரீதியிலான நடவடிக்கைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கான சுற்றுநிருபம் ஒன்று கல்வியமைச்சின் செய லாளரினால் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

புதிய நடவடிக்கைகளின்படி அரசாங்க உதவிபெறும் தனியார் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஓய்வுதியக் கொடுப்பனவுகளும் உறுதிப்படுத்தப்படவுள்ளன.

கல்வியமைச்சு வெளியிட்டுள்ள சுற்று நிருபத்தில் ஆசிரி யர்களை சேவையில் சேர்த்துக் கொள்ளல் பதவி உயர்வு வழங்குதல், இடமாற்றம் செய்தல் ஆகிய அம்சங்களும் உள் ளடக்கப்பட்டுள்ளது.

இதன்படி அமைச்சின் அங்கீகாரம் இல்லாமல் இந்தப் பாடசாலைகளில் ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்ள முடி யாது.

எனவே அமைச்சினால் ஆசிரியர்களை சேவையில் சேர்த துககொள்வதற்காக கடைப்பிடிக்கப்பட்டுவரும் திட்டத்திற்கு அமைவான கல்வித் தகைமையை கொண்டவர்களுக்கு எந்தப் பாடசாலைகளிலும் நியமனங்கள் வழங்கப்படும். எதிர் காலத்தில் புதிதாகத் தனியார் பாடசாலைகளை ஆரம்பிப் பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என அமைச்சு அதி காரி மேலும் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே 64 அரசாங்க உதவி பெறும் தனியார் பாட சாலைகள் நாட்டில் இயங்கி வருகின்றன. இந்தப் பாட சாலைகளில் ஒரு இலட்சத்திற்கு அதிகமான மாணவர்கள் கல்வி கற்பதுடன் 5 ஆயிரத்திற்கு அதிகமான ஆசிரியர்கள் பணியாற்றுகின்றார்கள். (அ-9)



## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

நன்மை உனக்கு அருகில் இருப்பது ஆயினும் அது இன்னும் உண்மை நிலையை எய்த வில்லை. தீமையால் கலக்கமடை யாமல் இருக்கக் கற்றுக் கொண்டபின்னர் நன்மையாலும் மகிழ்ச்சியடையாமல் இருக்க நாம் கற்றுக் கொள்ளவேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

# பொதுக்கட்டமைப்பை ஆதரிப்போர் இலங்கையின் தேசத்துரோகிகளாம்

## தேசியபிக்குகள் முன்னணி மிரட்டல்

(கொழும்பு)

உத்தேசிக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவிக்கும் அனைவரையும் தேசத்துரோகிப்பட்டியலில் உள்ளடக்கப்படவேண்டும் என தேசியப்பிக்கு முன்னணியின் பொதுச்செயலாளர் சந்திரா லோகதேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பொதுக்கட்டமைப்பு நிறுவப்படுவதை தடுக்க தாம் சகல நடவடிக்கைகளையும் எடுப்பதாகத்தெரிவித்த தேரர் பொதுக்கட்டமைப்பு ஊடாக பெற்றுக் கொளளவுள்ள சர்வதேச உதவியைப் பயன்படுத்தி தனியொரு இராச்சியத்தை விடுதலைப்புலிகள் உருவாக்கவுள்ளனர். இப் பொதுக்கட்டமைப்புப் பயணத்திற்கு ஆதரவு வழங்கவும், அதற்குதைரியம் ஊட்டுவதற்கும் முன்னிற்கும் சகலரும் இந்தநாட்டின் தேசத்து ரோகிப்பட்டியலில் உள்ளடககப்படுவர். இதனைத்தடுப்பதற்கு முன்னின்று செயற்படுவதற்கு தேசியபிக்கு முன்னணி தீர்மானித்துள்ளது. நாங்கள் நகரங்கள், கிராமங்கள் தோறும் சென்று இவர்கள் நாட்டை அழிப்பதற்காக பொதுக் கட்டமைப்புக்கு ஆதரவு வழங்கவேண்டா மெனக்கூறுவோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ச-8)

## மருதானையிலும் துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

கொழும்பு மருதானை பஞ்சிகாவத்தை பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தி[ல்] ஒருவர் உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டு விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார்.

மருதானையைச் சேர்ந்த 40வயதான நபரே உயிரிழந்தவராவார். அதேவேளை வென்னப்புவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது இவர் சுடப்பட்டுள்ளார். உயிரிழந்தவர் உணவகம் ஒன்றின் உரிமையாளர் எனத்தெரியவருகிறது.

(ச-8)

## திருமலையிலும் புலிகள்...

வாக்கப்பட்டுவருவதை உறுதிசெய்திருக்கிறது.

அப்பிரதேச மக்கள் மூலம் விடுதலைப் புலிகள் அப்பகுதியில் துப்புரவுப்பணியில் ஈடுபட்டு வருவது உறுதிசெய்யப்பட்டுள்ளதென அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

லொறிகளில் சீமெந்தும் இரும்புகளும் இறக்குவதை சிலர் பார்த்துள்ளனர். நூற்றுக்கணக்கான லொறிகளில் கட்டுமான பொருட்களை கொள்வனவு செய்ய சம்பூரை அண்டியுள்ள மொத்த விநியோகஸ்தர்களிடம் விற்பனை கட்டளை அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அமெரிக்க, சுவிஸ் விமான நிலையங்களில் பொறியியலாளர்களாகக் கடமையாற்றும் தமிழர்கள் இருவர் மூன்று வாரங்களுக்கு முன்னர் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாகக் கொழும்பு வந்து, ஓமந்தைச் சோதனைச்சாவடி ஊடாக கிளிநொச்சி சென்று சுமார் 2 வாரங்கள் அங்கு தங்கியுள்ளனர்.

எனினும் இரு பொறியியலாளர்களும் இலங்கையை விட்டுச் சென்ற பின்னரே உண்மையான தகவல்கள் வெளியாகியுள்ளதாக அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ச)

## உரும்பிராயில் நடைபெற்ற சிவகுமாரின் நினைவு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

மாவீரன் பொன்.சிவகுமாரன் நினைவு வணக்க நிகழ்வு நேற்று யாழ். உரும்பிராயில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றுள்ளது. உரும்பிராய் சந்தியில் சிவகுமாரன் நினைவுச் சிலை அமைந்துள்ள இடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வு கோப்பாய்ப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் சிவகடாட்சம் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சுடரினை யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் கண்ணன் ஏற்றினார். சிவகுமாரனின் திருவுருவச் சிலைக்கான சுடரினை அவரது தாயார் ஏற்ற, மலர்மாலையினை சகோதரன் அணிவித்தார்.நினைவுரைகளை வசாவிளான் மத்திய மகாவித்தியாலய முன்னாள் அதிபர் நடராசா, கோப்பாய்ப் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் செம்பருதி ஆகியோர்நிகழ்தினர். இந்நிகழ்வில் பெருமளவானோர் பங்குகொண்டு வணக்கம் செலுத்தினர். தொடர்ந்து மாலை பொன்.சிவகுமாரன் நினைவு எழுச்சிக் கூட்ட நிகழ்வுகள் நடைபெற்றன.

(ச-8)

## பொதுக்கட்டமைப்பில்...

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக்கட்டமைப்பில் எதிர்வரும் ஜூன் 12 அல்லது 15ஆம் திகதி கையெழுத்திடக்கூடும் என்று கூறப்படுகிறது.

தற்போது இந்தியப் பயணம் முடித்து விட்டு கொழும்பு திரும்பி உள்ள ஜனாதிபதி தனது ஆதரவாளர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடுவது குறித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

அத்துடன் சோதிடர்களின் ஆலோசனையும் பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது. இதேவேளை பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திட்டால் ஆட்சியிலிருந்து விலகுவது என்று ஜே.வி.யின் மத்திய குழு இறுதி முடிபு எடுத்துள்ளதாக அறிவித்துள்ளது. இதனால் பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடுவதற்கு முன்னர் ஜே.வி.யினருடன் கடைசிச் சுற்றுப் பேச்சுக்களை ஜனாதிபதி நடத்தவுள்ளார்.

இதன்போது ஜே.வி.பி தொடர்ந்தும் பொதுக்கட்டமைப்பை எதிர்த்தால் அதன் நான்கு முக்கிய அமைச்சர்களை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி முடிபு எடுத்துள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜே.வி.பி. ஆட்சியில் இருந்து வெளியேறும் பட்சத்தில் எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக்கட்சி மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஆதரவையும் கோர ஆளும் தரப்பு முடிபு செய்துள்ளதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக அரசின் அமைச்சர்கள் மற்றும் ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் சிலர் ஐக்கிய தேசியக்கட்சியுடன் கடந்தவாரம் ஆலோசனை ஒன்றை நடாத்தியுள்ளனர்.

ஜே.வி.பியை அமைச்சரவையில் இருந்து வெளியேற்றும் நிலையில் அல்லது ஜே.வி.பி வெளியேறும் நிலையில் ஜனாதிபதியை ஐ.தே.க. ஆதரிக்க வேண்டுமென கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இச்சந்திப்பு தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் அமைச்சர் ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

(ச)

## எரிபொருட்களின்....

இதன்படி பெற்றோல் 80- ரூபா, சுப்பர் பெற்றோல் 83 ரூபா, டீசல் ,50 ரூபா, சுப்பர் டீசல் 55 ரூபா, மண்ணெண்ணெய் 30 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட் டுள்ளது.

(ச-8)

## கருணா....

இக்குழு மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச்சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கருணா குழுவினரும் பதில் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுட்டுக்கொல்லப்பட்டவரின் சடலம் வாழைச்சேனை பொலிஸாரால் எடுத்துச்செல்லப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(ச)

## நாமே எமது....

அளிக்காமல் இழுத்தடிப்புச் செய்வது என்றபேரில் எந்தக் கோரிக்கையையும் இராணுவம் ஏற்காது நிராகரித்தே வந்தது.

இந்த நிலையிலேயே அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் இத்தகையகடிதம்ஒன்றை அனுப்பியுள்ளதாகத் தெரியவருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த கவலையைஅரசிற்குத் தெரிவித்துள்ளதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் ஹெலன் ஒல்ஸ்டெட்டிர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தின் இந்த அடாவடியான போக்கினால் ஞாயிறன்று ஓமந்தைச்சாவடி ஊடாக மட்டக்களப்பிற்குச் செல்லவிருந்த 30 உறுப்பினர்களைக்கொண்ட புலிகள் அணிதனதுபயணத்தை ரத்துசெய்துள்ளது.

இன்று மேற்கொள்ளவிருந்த பயணத்தையும் விடுதலைப்புலிகள் ரத்துசெய்துவிட்டதாக புலிகள் தரப்பில் கூறப்படுகிறது.

அரசியல் போராளிகளின் பயணத்திற்கு இராணுவம் பாதுகாப்பு வழங்காமையால் யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்கு பாதிப்பு ஏற்படும் அபாய நிலை தோன்றியுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

(ச)

## நவாலி....

இளங்கோவன் விசாரணைகளை மேற்கொண்டதுடன், அடையாளம் காணும் பொருட்டு சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

இச்சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அண்மையில் இரண்டு வெற்றுத் தோட்டக்கள் மீட்கப்பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை சுட்டுக்கொல்லப்பட்டவர் ஈ.பி.டி.பியின் முன்னைநாள் உறுப்பினரான அசோக் என இராணுவத்தரப்புத் தெரிவித்துள்ளது. 24 மணிநேரத்தில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இரண்டாவது சூட்டுச் சம்பவம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

(ச-8)

## குருநகரைச்....

ஓட்டோ ஒன்றில் வந்த இளைஞர்கள் குறிப்பிட்ட பஸ் பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் முன்பாக நிறுத்தப்பட்டபோது அதற்குள் ஏறி குறிப்பிட்ட இரு இளைஞர்களையும் சுட்டுக்கொன்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக அப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் அப்பகுதியைச் சுற்றி வளைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர்களிடமிருந்து நானகு அடையாள அட்டைகள், ஐயாயிரம் ரூபாபணம் மற்றும் இரண்டு கைத்தொலைபேசிகள் என்பவற்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதேவேளை இக்கொலைச் சம்பவம் தொடர்பாக இரண்டு பெண்கள் கொட்டாஞ்சேனைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் குருநகரைச் சேர்ந்தவர் எனவும், அவர் கடந்த இரு நாட்களுக்கு முன்பே கொழும்பு வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ச-9,8)

## மட்டு.அரசியல்துறை...

போராளிகள் அதற்கு இடமளிக்கவில்லை.

இராணுவத்தினர் தனியாக வந்து சோதனையிட அனுமதிக்க முடியாது. அப்படியானால் கண்காணிப்புக் குழு முன்னிலையில்தான் சோதனையிட முடியும் என்று விடுதலைப்புலிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வெளிநாட்டவர்க்ளுக்கு இங்கு அலுவல் இல்லை.இது எங்கள் நாடு. நாங்கள் தான் சோதனையிட முடியும் என சோதனைநடடிக்கைக்கு பொறுப்பாக வந்த இராணுவ அதிகாரியொருவர் கூறியதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இதனால் விடுதலைப்புலிகளுக்கும் அங்குவந்த இராணுவத்தினருக்கும் இடையில் கடுமையான வாய்த்தகராறு ஏற்பட்டது. இதனையடுத்து கண்காணிப்புக்குழுவினருக்கு சம்பவம் குறித்து விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்டது.

உடனடியாக சம்பவஇடத்திற்கு வந்த கண்காணிப்புக்குழுவினர் பொலிஸார் சகிதம் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தமது அலுவலகம் மீது தொடரும் இத்தகைய சோதனை நடவடிக்கை குறித்து விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல்துறை வன்மையான கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு நகரிலுள்ள ரெலோவின் மாவட்டச் செயலகத்திலும் இராணுவத்தினர் பொலிஸாரின் உதவியுடன் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தியுள்ளனர்.

நள்ளிரவு 11.45 முதல் 12.30 மணிவரை தேடுதல் நடைபெற்றதாக ரெலோ தரப்பிலிருந்து தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்த தேடுதலில் இராணுவத்தினரும் பொலிசாரும் மட்டுமன்றி ராசிக்குழு எனப்படும் தேசிய துணைப்படை மற்றும் இராணுவபுலனாய்வுத்துறையைச் சேர்ந்தவர்களும் ஈடுபட்டதாகவும் அந்த தகவல் கூறுகின்றது.

(ச-8)


மனோகரா யாழ்



ஜீவா, கஜாலா, சரண்யா நடித்த

ராம்

கா.நேரம்: 10.30,2.30,6.30,9.30(பு.நே)

நாதன்ஸ் சினிமா

குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக

உங்கள்

பிரகாஷ்ராஜ், நவதீப், தேசாஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த

3 வது வெற்றிவாரம்

அறிந்தும் அறியாமலும்



கா.நே: 10.30,2.30,6.30,9.30(பு.நே)

நிறைஞ்சனாஸ்

சங்கானை

சரத்குமார், தேவயானி, நெப்போலியன் நடித்த

தென்காசிப்பட்டணம்

கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.